# தொண்டன்

ஆரம்பம் : 1969 பெப்ரவரி | செப்டம்பர் 2009 | சமய - சமூக - இலக்கிய வெளியீடு | 25/=

## குருக்களுக்கான ஆண்டு
## 19.06.2009 - 19.06.2010

குருக்களின் பாதுகாவலர்
**ஜோன் மரிய வியானியின்**
விண்ணகப் பிறப்பின் 150வது ஆண்டு நிறைவு

குருக்கள் இல்லையேல் நற்கருணை இல்லை
நற்கருணை இல்லையேல் திருச்சபை இல்லை
ஆகவே குருக்களைப் புரிந்துகொள்வோம்
அவர்களோடு இணைந்து பணி புரிவோம்.

மையக்கருத்து: "கிறிஸ்துவின் பற்றுறுதி குருக்களின் பற்றுறுதி"



### நோக்கம்:

01. தமது திருப்பணி நிலைக்கு ஏற்ப குருக்கள் தங்கள் அருள்வாழ்வை கிறிஸ்துவைப் பின்பற்றி ஆழப்படுத்த.

02. குருக்களின் வாழ்வையும் பணியையும் இறைமக்கள் மற்றும் பொதுமைச் சமூகம் பாராட்டி ஏற்றிட.

03. குருத்துவ அழைப்பினை மேலும் ஊக்கப்படுத்திட.

04. அருட்சாதனங்களாலும், அருட்பணிகளாலும் மக்கள் வாழ்வு சிறக்கவும், தீமை அகலவும் ஆற்றல் பெற்றிட.

05. குருக்களின் நல்வாழ்விலும், ஏனைய தேவைகளிலும் தகுந்த கவனத்தை உருவாக்கிட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


**செப்டம்பர் - 2009**

மலர்- 41 இதழ்- 08



**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
வயலற் சந்திரசேகரம்

**கணினி வடிவமைப்பு**
நிரோன்

**ஓவியங்கள்**
சுதா



**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்



**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| இருநூறாண்டை நிறைவு... | - | 02 |
| மகா அலெக்சாண்டர் | - | 06 |
| கடுகுக் கதை | - | 07 |
| எமது உடல்நலத்தில்... | - | 08 |
| இராணுவம் இல்லாத... | - | 10 |
| மூன்று கிறித்தவ தமிழ்... | - | 11 |
| காயங்கள் (சிறுகதை) | - | 15 |
| மாணவர் பக்கம் | - | 19 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 20 |
| அடிக்கடி தொலைந்து... | - | 22 |
| இலக்கிய மஞ்சரி | : | 23 |
| உங்கள் சுகமான... | : | 24 |
| நாட்டார் பாடல்கள் | : | 25 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| அறிவை வளர்ப்போம் | - | 28 |


**ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)**


**SOCIAL COMMUNICATIONS CENTRE**
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : *25/=*
ஆண்டு சந்தா *: 400/=*
(தபாற்செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு

'யுத்தம் முடிவடைந்துவிட்டது. பயங்கரவாதிகள் அழிக்கப்பட்டுவிட்டனர்' இதுவே அரசாங்கத்தின் உறுதியான அறிவிப்பு. அதேவேளை யுத்தகாலத்தை விட அதிகமான கெடுபிடிகள் தலைநகரிலும் ஏனைய நகரங்களிலும் இருப்தாகத் தெரியவருகிறது. இது பாதுகாப்பைப் பலப்படுத்தவே என்று காரணம் கூறப்பட்டாலும் யாரைப் பாதுகாக்க...? யாரிடமிருந்து பாதுகாக்க...? புரியவில்லை! தெரியவில்லை!

யுத்தம் முடிவடைந்தாலும் யுத்தத்தின் காயங்கள், அதன் வலிகள் இன்னும் ஆறவில்லை. இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடைத்தங்கல் முகாம்களில், முட்கம்பி வேலிகளுக்கு நடுவே சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள், வேதனைகள், ஆக்கினைகள், அவமானங்கள் அளவிட முடியாதவை என்று கூறப்படுகிறது. சமயத் தலைவர்கள், சர்வதேச நாடுகள், சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் அனைத்தும் வாய் கிழியக் கத்தியும் நடந்தது ஒன்றுமில்லை. முட்கம்பி வேலிகளுக்குள் முடங்கிப் போயுள்ள நமது சகோதரர்களை விடுவிக்க எந்த நாதியுமில்லை.

"என்செய்ய நினைத்தாய் எந்தமிழ்ச் சாதியை" என்ற பாரதியின் கேள்வியை நமக்குள் நாமே கேட்டுப் புழுங்கிப் போகத்தான் வேண்டுமோ?

"தமிழர்கள் இந்நாட்டு மக்கள். அனைவருக்கும் இந்நாடு உரியது. அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து இந்த நாட்டைக் கட்டி எழுப்பவேண்டும்" என்று தலைவர்கள் பலரும் ஆங்காங்கே பேசி வருகின்றனர். இந்த அலங்காரப் பேச்சுகளால் ஆவது ஒன்றுமில்லை.

உண்மையில் அப்படியொரு எண்ணம் இருக்குமானால் அதை உடனே நடைமுறைப்படுத்தவேண்டும். சிறை வைக்கப்பட்டுள்ள அப்பாவி மக்களை உடனடியாக விடுதலை செய்து அவரது வாழ்விடங்களில் குடியேற அனுமதிக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தி அவர்களது நியாயமான விருப்பங்களை, உரிமைகளை சட்டரீதியாக உறுதிப்படுத்த வேண்டும்.

மதநம்பிக்கை உள்ள மக்கள் நிறைந்த இந்நாட்டில் முதலில் நாம் மனிதத் தன்மை உள்ளவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டாமா?

**• இணை ஆசிரியர்**



## இறைவாக்கு

**"உன்னை விடுவிக்கவும் காக்கவும் நான் உன்னோடு இருக்கிறேன், என்கிறார் ஆண்டவர்"**

(எரேமியா: 15:20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இருநூறாண்டை நிறைவு செய்யும் மட் / புளியந்தீவு புனித மரியன்னை ஆலய ஜூபிலி விழா - 15.08.2009

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் இணைப்பேராலயமாக, மீன்பாடும் தேனாட்டில் பெருமைமிகு புளியந்தீவுப் பங்கில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் எமது புனித அன்னையின் ஆலயமாக விளங்கும் புனித மரியன்னை ஆலயம் தொடங்கப்பட்டு இருநூறாண்டுகள் நிறைவுறும் விழாவைப் புளியந்தீவுப் பங்குமக்கள் கடந்த 15.08.2009 அன்று, அத்திருக்கோயிலின் புனித விண்ணேற்பு அன்னையின் திருவிழாவன்று அக்களிப்புடன் கொண்டாடினர்.

1808ம் ஆண்டில் பஸ்கால் முதலியார்



என்னும் செல்வந்தரால் வழங்கப்பட்ட ஒரு காணியில் தொடங்கப்பட்ட புனித மரியன்னை ஆலயம் உண்மையில் தனது இருநூறாம் ஆண்டினை கடந்த 2008ம் ஆண்டில் கொண்டாடியிருக்க வேண்டும். எனினும் 2008ம் ஆண்டில் நிகழ்ந்த மாபெரும் சிறப்பு நிகழ்வுகளான நமது அதிவந்தனைக்குரிய ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் ஆயர்த்துவ வெள்ளிவிழா நிகழ்வுகளும் (2008 வைகாசி 23) மட்டக்களப்பு மண் பெருமையுடன் வழங்கிய எமது அதிவந்தனைக்குரிய துணையாயர் பொன்னையா ஜோசப் ஆண்டகையின் ஆயர்த்துவத் திருப்பொழிவு நிகழ்வும் (2008 வைகாசி 24) இருநூறாண்டு ஜூபிலிக் கொண்டாட்டத்தைச் சற்றுப் பின்தள்ளி வைத்தன.


இதற்கமைய இவ்வருடம் விண்ணேற்பு அன்னையின் திருவிழா ஜூபிலிக் கொண்டாட்டப் பெருவிழாவாக அமைந்தது. வழமைபோன்று வருடாந்தத் திருவிழா நவநாட்கள் 06.08.2009 அன்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாயின. 14.08.2009 அன்று மாலை ஆராதனையும் நற்கருணை ஆசீரும், அன்னையின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெற்றது. வழமையான வீதிகளூடான இப்பவனியில் வழக்கத்தைவிட பெருந்தொகையான பக்தர்கள் கலந்துகொண்டமை சிறப்பாகும். இவற்றுக்கெல்லாம் மெருகூட்டும் வகையில் கடதாசி மட்டையில் செய்யப்பட்ட கூடுகளில் மெழுகுவத்தி ஏற்றப்பட்டு மக்கள் பவனியாக அவற்றை ஏந்திச் சென்றமை அம்முன்னிரவு வேளையில் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. பவனி முடிந்ததும் களைத்திருந்த மக்களை இதமான குளிர்காற்று ஆறுதல் படுத்தியமை மறக்க முடியாதது; அது அன்னையின் அரவணைப்பாகவே இருந்தது.

இருநூறாண்டு விழாவில் அன்னை நமக்களித்த மிகப் பெரும் ஆசி திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதியின் (Apostolic Nuncio) வருகையாகும். திருநாள் திருப்பலி 15.08.2009 காலை 7.15 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திருப்பலிக்கு முன்னர் 7.15 மணிக்கு ஆயர் இல்லத்திலிருந்து பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி அதி மேன்மைமிகு பேராயர் ஜோசப் ஸ்பிரேறி அவர்களும் அவரது செயலாளர் மொன்சிஞ்ஞோர் மொகாம்பே அவர்களும் மட்/திருமலை ஆயர் அதி.வந்.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களும் புனித மரியாள் சேவா சங்கத் தலைவர் திரு. S. புவிராஜசிங்கம், செயலாளர் திரு. தயான், பொருளாளர் திரு. T. C. கனகரட்ணம் ஆகியோரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**"குருக்கள் ஆண்டு திருச்சபையிலும் உலகிலும் குருக்களின் பணியின் முக்கியத்துவத்தை ஆழப்படுத்துவதற்கு ஓர் அரிய வாய்ப்பு" என்று குறிப்பிட்டார் திருத்தந்தை 16ம் பெனடிக்ற்**



இவ்வாண்டில் குருக்களுக்கு முன்மாதிரிகையாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஆர்ஸ் நகர புனித மரிய வியான்னி அருளப்பர் பற்றிப் பேசிய திருத்தந்தை, ஆகஸ்ட் 4ம் திகதியன்று நம்மால் நினைவுகூரப்பட்ட இப்புனிதர் இறந்ததன் 150ம் ஆண்டை முன்னிட்டு சர்வதேசக் குருக்கள் ஆண்டை தான் அறிவித்ததையும் குருத்துவ வாழ்வுக்கு எடுத்துக்காட்டான இந்த அடக்கமான பங்குக் குரு, பங்குக் குருக்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்துக் குருக்களுக்கும் எடுத்துக்காட்டு என்றும் கூறினார்.

புனித மரிய வியான்னி அருளப்பர் பங்குத்தந்தையர்களின் பாதுகாவலர். 1786ல் பிரான்சில் பிறந்த இவர், 18வது வயதில் குருமடத்தில் சேர்ந்தபோது இலத்தீன் அறிவு மிகக் குறைவாக இருந்ததால் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். ஆயினும் இவரது ஆழ்ந்த ஞானத்தைக் கண்ட ஓர் ஆசிரியர் தாய் மொழியில் வேதக் கலையைக் கற்றுக்கொடுத்தார். பின்னர் 25வது வயதில் குருப்பட்டம் பெற்றார். ஆர்ஸ் நகரப் பங்குத்தந்தையாக இருந்த இவர் மணிக்கணக்காக ஒப்புரவு அருட்சாதனம் கேட்பார். ஒருமுறை தமது ஆயரிடம் "மறைமாநிலம் முழுவதும் மனந்திரும்ப வேண்டுமா? அவ்வாறாயின் எல்லாப் பங்குத்தந்தையரும் புனிதராகவேண்டும்" என்று கூறினார். 1859ம் ஆண்டு இறந்த இவரது இறப்பின் 150ம் ஆண்டை முன்னிட்டு கடந்த 19 ஜூன் முதல் சர்வதேசக் குருக்கள் ஆண்டு சிறப்பிக்கப்பட்டு வருகிறது.

மாலை அணிவித்து, பங்கு மக்கள், மறைக்கல்வி மாணவர்கள், குருக்கள், துறவற சகோதர சகோதரிகள் மாணவிகளின் கோலாட்ட நிகழ்வுடன் ஆலயப் பிரதான நுழைவாயிலை வந்தடைந்தனர். அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆலய நுழைவாயில் வளைவினை பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி அதிமேதகு பேராயர் ஜோசப் ஸ்பிரேறி அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து நுழைவாயிலிலிருந்து தமிழ் கலாசார பேண்ட் வாத்தியத்துடன் ஊர்வலம் ஆலயத்தினையடைந்தது. அங்கு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் திருவிழாத் திருப்பலி பேராயர் ஜோசப் ஸ்பிரேறி, அவரது செயலாளர் மொன்சிஞ்ஞோர் மொகாம்பே மற்றும் அதி.வந்.ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

திருப்பலியைத் தொடர்ந்து பங்குத்தந்தையின் தலைமையில் கொடி இறக்கப்பட்டு புனித அன்னையின் திருச்சொரூப ஆசியுடன் திருவிழா இனிதே முடிவடைந்தது.

புளியந்தீவுப் பங்குமக்களின் மற்றுமொரு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வரலாற்றுச் சாதனையாக 15.08.2009 அன்று மாலை 5.00 மணிக்குப் புளியந்தீவுப் பங்கினதும் புனித மரியன்னை ஆலயத்தினதும் வரலாறு கூறும் ஆவணமாகிய "உதய தாரகை" எனும் ஆவண நூல் வெளியிடப்பட்டது. இவ்வெளியீட்டு நிகழ்வு மட் / புனித சிசிலியா கல்லூரி கேட்போர் கூடத்தில் திருத்தந்தையின் பிரதிநிதியவர்கள், அவரது செயலாளர், எமது ஆயர் ஆகியோரினதும் ஏனைய குருக்கள் துறவியரினதும் பிரசன்னத்தில் இடம்பெற்றது. விழாவுக்கு எமது பங்குத்தந்தை அருட்பணி. J.A.G.இரட்ணகுமார் அடிகளார் தலைமை தாங்கினார். உதவிப் பங்குத்தந்தை ஜூட் சர்வானந்தன் அடிகளாரின் இறைவேண்டுதலுடன் ஆரம்பித்த நிகழ்வு அருட்கலாநிதி டொமினிக் சாமிநாதன் அடிகளாரின் நூல் அறிமுக உரையினால் வளம் பெற்றது. அதிவந்தனைக்குரிய ஆயரும் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி அஜராத்மானந்தாஜி மகராஜ் அவர்களும் திருத்தந்தையின் பிரதிநிதியும் சிறப்புரை நிகழ்த்தினர்.

கடந்த ஜூன் மாதத்தில் தனது குருத்துவ வெள்ளி விழாவை நிறைவு செய்த திருத்தந்தையின் பிரதிநிதியை எமது ஆயரவர்கள் பொன்னாடை போர்த்தி, மீன்பாடும் தேனாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் இரட்டை மீன் சின்னம் பொறித்த ஒரு ஞாபகச் சின்னத்தையும் வழங்கிக் கௌரவித்தார். எமது ஆயரின் ஜூபிலியைப் புளியந்தீவுப் பங்குமக்கள் கௌரவிக்கும் வகையில் எமது பங்குத்தந்தையவர்கள் ஆயருக்குப் பொன்னாடை போர்த்தி ஒரு ஞாபகச் சின்னத்தையும் வழங்கிக் கௌரவித்தார்.

வெளியிடப்பட்ட நூல் கௌரவ விருந்தினர்களுக்குப் பங்குத்தந்தையாலும், உதவிப் பங்குத்தந்தையாலும் வழங்கப்பட்டது.





அத்துடன் பங்குமக்கள் சார்பில் வட்டாரப் பிரதிநிதிகள் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

விழாவுக்கு மெருகூட்டியவை சிறப்புரைகளுக்கு இடையே நடந்த கண்கவர் நடன நிகழ்ச்சிகளாகும். சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவக மாணவியரின் வரவேற்பு நடனம், திருமதி ஷர்மிலா ரஞ்சித்குமார் அவர்களது மாணவியரின் பண்பாட்டு நடனம், திருமதி பிரான்சிஸ் அவர்களது மாணவ மாணவியரின் கவர்ச்சிமிகு சிறுவர் நடனம், புனித சிசிலியா கல்லூரியின் சார்பில் திருமதி வசந்தி நேரு அவர்களது மாணவியரின் நடனம் ஆகியன கௌரவ விருந்தினர்களையும் மெய்மறக்கச் செய்தன. புளியந்தீவுப் பங்கினதும், புனித மரியன்னை ஆலயத்தினதும் வரலாற்றை ஆவணப்படுத்திய பங்குமக்களைப் பலரும் பாராட்டினர்.


ஜூபிலி விழாவினை நிறைவு செய்வதாக அமைந்த "உதய தாரகை" நூல் வெளியீட்டு நிகழ்வு பங்கு மக்களின் சாதனையேயாகும். ஜூபிலி விழாவுக்காக பங்குமக்கள் நீண்டகாலமாகவே தங்களை உணர்வு பூர்வமாக ஆயத்தப்படுத்தி வந்திருந்தனர். எனவே, இறுதிநாள் நிகழ்வில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி, மிகச் சிறந்த பங்களிப்பினை வழங்கி நிகழ்வு சிறப்புற உழைத்தமையைப் பலரும் பாராட்டினர்.

திருத்தந்தையின் பிரதிநிதியின் எதிர்பாரா வரவும், சகல மக்களினதும் உணர்வு பூர்வமான கொண்டாட்டமும் அன்னையின் விசேட ஆசி என்றே விசுவசிக்க வேண்டியுள்ளது. எனவே, இறைதந்தையைப் புகழ்வோம்! அன்னையை வாழ்த்துவோம்!

**- டானியல் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# எனக்குத் தா!

- யாழ். ராதவல்லி -

இறைவா!
எனக்கு மனச் சஞ்சலத்தைத் தா!
மற்றவர்கள் படுகின்ற துன்பம்
எனக்கு ஏற்பட்டது போல்
என் மனம் சஞ்சலப்படட்டும்

இறைவா!
எனக்கு அமைதியின்மையைத் தா!
மற்றவர்களுக்கு அமைதி கிடைக்கும்வரை
என் மனதில் அமைதியின்மை தோன்றட்டும்

இறைவா!
எனக்கு கண்ணீரைத் தா!
மற்றவர்கள் கண்ணீர் துடைக்கப்படும்வரை
என் கண்களில் கண்ணீர் ஓடட்டும்

இறைவா!
எனக்குப் பசியைத் தா!
மற்றவர்கள் வயிற்றுப் பசி தீர்க்கப்படும்வரை
எனக்கு வயிற்றுப் பசி இருக்கட்டும்

இறைவா!
எனக்குத் தாகத்தைத் தா!
மற்றவர்கள் தாகம் தீர்க்கப்படும்வரை
எனக்குத் தாகம் இருக்கட்டும்



## உலக அமைதி நாள்

ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதலாம் நாளை திருச்சபை அமைதி நாளாக அறிவித்துள்ளதை அனைவரும் அறிவர். 2010ம் ஆண்டு உலக அமைதி நாள் மையக் கருத்தாக **அமைதியைக் காக்கவேண்டும் என்றால் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும்** எனத் தெரிவித்துள்ள திருத்தந்தை இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்கும் உலக அமைதிக்கும் உள்ள தொடர்பைக் காணுமாறு வலியுறுத்துகின்றார். சுற்றுப் புறத்தைப் பாதிக்கும் செயல்களும் இயற்கையைப் பயன்படுத்தும் முறையும் வெப்ப மாற்றமும் மக்கள் தொகையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை எனத் தெரிவித்த திருத்தந்தை இந்தச் சவால்களை நீதியின் அடிப்படையில் சமூக, சமத்துவக் கண்ணோட்டத்தோடு அணுகுவது மக்களுக்கு நலம் பயக்கும்; சுற்றுப்புறத்தை பாதுகாப்பதே அமைதிக்கு வழிவகுக்கும் எனவும் தெரிவிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இச்சிறு கட்டுரையில் அலெக்சான்டர் மன்னன் கலைக்குச் செய்த தொண்டு பற்றி விசேடமாகக் குறிப்பிட்டுள்ளேன். மகா அலெக்சான்டர் மன்னனை ஒரு பெரும் வீரனாக உலகம் பார்க்கின்றது. உலக வரலாற்றில் 'மகா' என்ற அடைமொழி தாங்கியவர்கள் சிலர் மட்டுமே. புதிது புதிது புனைபவர்களை உலகம் 'மகா' என்ற அடைமொழியால் வழங்குகிறது.

மகா அலெக்சான்டர் புதிய நகரமான "அலெக்சன்றியா" என்ற பட்டினத்தை அமைத்தார்; அதை அலங்கரித்தார். செராபின் தெய்வத்திற்குக் கோவில் அமைத்தார். அது பளிங்கினாலும் விலை உயர்ந்த கற்களினாலும் ஆனது. ஆனாலும் இந்நூலில் குறிப்பிடும் சொலமன் கட்டிய மாளிகைக்கு அது இணையாகாது. இந்தக் கோயிலில் அலெக்சான்டரின் நூலகம் அமைந்தது. அது உலகத்தில் மிகமிகப் பெரிய நூலகம். அலெக்சான்டர் படையெடுத்த நாடுகளில் பெரும் கலைகளையும் கலாசாரங்களையும், விஞ்ஞானங்களையும் ஏனைய முதுசங்களையும் அடக்கிய நூல்களையும், வேத நூல்களையும் பபிலோனியா, போசியா, இந்தியா போன்ற நாடுகளில் இருந்த அதி உன்னத நூல்களையும் எகிப்து நூற் களஞ்சியங்களையும் அது உள்ளடக்கியிருந்தது. எகிப்து பெரும் சாம்ராஜ்ஜியம். ஆபிரிக்காவின் மத்திய பகுதியான எத்தியோப்பியாவிலிருந்து வடக்கே சின்ன ஆசியா, முன்னர் போசியா தற்காலத் துருக்கி, அக்காலப் பலஸ்தீனா, மொசப்பத்தேமியா, இத்தாலியத் தீபகற்பம், கிரேக்க நாடுகள் ஆகியவற்றின் மேலும் ஆட்சி நடத்தியது. இதை ஆண்ட பரம்பரையினர் 27. கி.மு 5000 ஆண்டுகள் பழைமையானது. வானசாஸ்திரம், கணிதம், மருத்துவம் ஆட்சியியல் ஆகியவற்றில் பல்துறை விற்பனர்களும் வகுப்பினர்களும் எகிப்தில் தோன்றியிருந்தார்கள். சூரியன் அவர்களது தெய்வம். அதை அமுன் என்றனர். "ரா" என்பது அதன் மற்றொரு பெயர். அவர்கள் அரசனைத் தெய்வ குமாரன் அல்லது சூரிய குமாரன் என்று அழைத்தனர். இறந்தவர்களின் உடலை பல வருடங்களுக்குப் பாதுகாக்கும் அறிவு பெற்றிருந்தனர். அந்த மம்மிகளே இன்று கண்டுபிடிக்கப்படுகின்றன.

இந்த அறிவுத் தேற்றம்

# மகா அலெக்சாண்டர்

- ஆக்கம். கலாநிதி. எஸ்.ஏ.ஐ.மத்தியு -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அடங்கிய நூல்கள் யாவும் மகா அலெக்சான்டரினால் செராபின் நூலகத்திலே சேகரிக்கப்பட்டன. விவிலிய பழைய ஏற்பாட்டு நூல்கள் மகா அலெகக்சாண்டரினாலே அலெக்சன்றியாப் பட்டினத்தில் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. அக்கால கிரேக்க உலகெங்கிலும் இருந்த அறிஞர் பெருமக்கள் இந்த் நூலகத்திற்குச் சென்று ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். இது மகா அலெக்சாண்டர் உலகிற்குச் செய்த மாபெரும் சேவையாகும். இங்குதான் உலகச் சிந்தனைகளும், சமயச் சிந்தனைகளும் ஒன்று கலந்தன. இந்த அசாதாரண உலகச் சாதனை காரணமாக உலகம் ஒன்றாகியது. உதாரணமாக காவியங்களின் ஒடுங்குதசை ஒன்றாக இருப்பதை ஆழப்படித்து அறியலாம். உலக நூல்களை ஓரிடத்தில் கூடியிருந்து ஆய்வுகள் செய்தார்கள். இந்திய நாகரீகம் மேற்கிற்குச் சென்றது. மேற்கு நாகரீகம் கிழக்கிற்கு வந்தது. (அமெரிக்கா கண்டுபிடிக்கப்படவில்லை. இங்கிலாந்து, ருஸ்சியா, மிலேச்ச நாடுகள் என வர்ணிக்கப்பட்ட காலம்) இந்த நூலகம் அதன் ஆரம்பம் தொட்டு கி.பி. நான்காம் நூற்றாண்டில் அது அழிவுறும் வரை 700 ஆண்டுகளாக கல்வியறிவு, ஞானதீபத்தை பேரறிஞர் மூலமாக உலகத்துக்கு அறிவித்தது.

அறிஞர் பெருமக்களுக்கு, ஆய்வாளர்களுக்கு இந்தத் தகவல் உதவியாக அமையலாம்.

# கடுகுக் கதை 19 அந்தோனியும் டேவிட்டும்

பாலர் பாடசாலைக்குச் செல்லும் அந்தோனியின் கடைசி மகன் டேவிட் தகப்பனைக் கேள்விகளால் குடைந்துகொண்டிருந்தான்.

"அப்பா, மடுக்கோவில் என்றால் மடுவுக்குள்ளயா கோவில் இருக்கு?" என்று தகப்பனிடம் கேட்டான்.

"இல்ல மகன்... மருதமடு என்ற இடத்தில் அந்த மாதா கோவில் இருக்கிறதால அப்பிடிக் கூப்பிடுறது"

"அங்க பெருநாளைக்குப் போவமா அப்பா...?"

"வாற வரிசம் போவம் மகனே!" அந்தோனி சொல்லிச் சமாளித்தான்.

"அப்ப ரீவியில பெருநாளைக் காட்டுறாங்க பாப்பமா...?"

"பாரு மகன்..."

அந்தோனியின் மகன் தொலைக் காட்சியில் மடுமாதா திருவிழாவைப் பார்த்துக்கொண்டிருந்தான். கமரா பல பக்கமும் சுழன்றது. ஒரு கட்டத்தில் ஐந்து பௌத்த



மதகுருமார்கள் கதிரையில் அமர்ந்திருப்பதைக் காட்டினார்கள்.

டேவிட் சத்தமிட்டுச் சொன்னான்...

"அப்பா! ரீவியில வேதக்காரப் பிக்குமாரக் காட்டுறாங்க"

அந்தோனிக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

– பர்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எமது உடல்நலத்தில் கொலஸ்ரோலின் பங்கு
## (Cholesterol influence on our health)

எமது உடலில் சக்தி உருவாகுவதிலும் பல்வேறுபட்ட அனுசேபத் தொழிற்பாடுகளுக்கும் கொலஸ்ரோல் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. எம்மில் பலபேர் கொலஸ்ரோல் என்றால் எப்போதும் எமது உடலுக்குத் தீங்கானது என்றே கருதுகின்றனர். அவ்வாறான எண்ணம் உண்மையில் தவறானது. உடலில் கொலஸ்ரோலின் அளவு அளவாகக் காணப்படும் பட்சத்தில் எமக்கு அதனால் நன்மையே தவிர தீமைகள் மிகக் குறைவே.


### கொலஸ்ரோல் என்றால் என்ன?

எமது உடலில் கொழுப்பு (Fat) இரண்டு வடிவங்களில் கிடைக்கின்றது.

- உட்கொள்ளும் உணவின் மூலம்
- உடல் உறுப்புகளைச் சூழவுள்ள, தோலின் கீழுள்ள, ஏனைய உறுப்புகளில் (Internal Organs) சேமிப்பு நிலையிலுள்ளவை மூலம்.

இக்கொழுப்பு உரிய சந்தர்ப்பத்தில் உடைந்து சக்தியை உருவாக்கப் பயன்படும் மூலகாரணியாகிய கொலஸ்ரோல் எனும் வஸ்துவை உருவாக்குகின்றது. இக்கொலஸ்ரோல் எமது குருதியில் (Blood) கலந்து உடல் உறுப்புகள் அனைத்திற்கும் எடுத்துச் செல்லப்படுகின்றது.

Cholesterol is produced by the liver and we consume it from meat and dairy products




ஒரு சீரான உடல் தொழிற்பாடுடைய மனிதனில் குருதித் திரவவிழையத்தில் கலந்திருக்கும் கொலஸ்ரோல் ஒரு சீரான அளவிலேயே காணப்படும் (அண்ணளவாக 150-250 mg %). இவ்வளவு அதிகரிக்கும் பட்சத்தில் குறிப்பாகக் குருதிக் குழாய்களின் உள்ளிடத்தில் (Lumen of blood vescels) நாளடைவில் படிப்படியாக படிய ஆரம்பிக்கின்றது. இதன் காரணமாக அக்குருதிக் குழாய்களால் எடுத்துச்செல்வேண்டிய குருதியின் அளவு படிப்படியாகக் குறைவடைய குறிப்பாகப் பின்வரும் உறுப்புகளில் பாரிய விளைவுகள் ஏற்படுகின்றன.

- **மூளை** (Stroke - பாரிசவாதம்)
- **இருதயம்** (Heart Attack - மாரடைப்பு)
- **சிறுநீரகம்** (Renal Disease - சிறுநீரகக் குறைபாடுகள்)

இவைபோன்று எமது உடலின் ஏனைய உறுப்புகளிலும் மேலதிக கொலஸ்ரோல் படிவடைந்து ஆபத்தான விளைவுகளை உண்டுபண்ணலாம்.

### எமது உடலில் எவ்வாறு கொலஸ்ரோலின் அளவு அதிகரிக்கின்றது? அவை பின்வருமாறு:

#### 01. கொழுப்புள்ள உணவுகளை அடிக்கடி உட்கொள்வதனால்

கொழுப்புள்ள உணவுகள் யாவை?

*01. மாட்டிறைச்சி*
*02. பன்றி இறைச்சி*
*03. மரை இறைச்சி*
*04. இறால்*
*05. கணவாய்*
*06. நண்டு*
*07. மட்டி*
*08. நிலக்கடலை*
*09. கஜூ*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**அனைத்துலக**
**குருக்கள் ஆண்டின்**
**நிறைவையொட்டி உரோம் நகரில்**
**2010ம் ஆண்டு ஜூன் 9 முதல் 11 வரை**
**குருக்களுக்கான அனைத்துலகக் கருத்தரங்கு**
**நடைபெறும் என்று திருப்பீட குருக்கள்**
**பேராயம் அறிவித்துள்ளது. புனித பவுல்**
**பசிலிக்காவில் ஜூன் ஒன்பது அன்று தொடங்கும்**
**இச்சர்வதேசக் கருத்தரங்கு 'கிறிஸ்துவின்**
**பிரமாணிக்கம் குருக்களின் பிரமாணிக்கம்'**
**என்ற தலைப்பில் நடைபெறும் என்று**
**அப்பேராயம் அறிவித்தது. இதனை நடத்தும்**
**பொறுப்பு ஒப்பெரா ரொமானோ**
**பெல்லேகிரினாஜி என்ற வத்திக்கான்**
**சுற்றுலா நிறுவனத்திடம்ஒப்படைக்கப்**
**பட்டுள்ளது. மேய்ப்புப் பணிச் சுற்றுலா,**
**திருப்பயணத் திருப்பணி வழியாக**
**நற்செய்தி அறிவிப்பது**
**இந்நிறுவனத்தின்**
**நோக்கமாகும்.**

**02. அடிக்கடி மன அழுத்தம் ஏற்படல்** (Stress)

அவை எவ்வாறு உருவாகும்?

*01. ஓய்வின்மை*
*02. சீரான நித்திரையின்மை*
*03. அதிக யோசனை*
*04. அதிக கவலையடைதல்*
*05. அடிக்கடி கோபப்படல்*
*06. அடிக்கடி பயப்படல்*
*07. போதியளவு உடற்பயிற்சியின்மை*

**03. உடலில் உள்ள ஏனைய நோய்கள்**

01. உயர் குருதியமுக்கம் (Hypertension)
02. நீரிழிவு நோய் (Diabetes Mellitus)
03. உடல் பருமன் அதிகரித்தல் (Obesity)
04. புகைத்தல் பழக்கவழக்கம் (Smoking habits)
05. குருதியில் தைரொக்சின் எனும் (Hypothyroidsm) ஹோமோனின் அளவு குறைவடைந்த நிலை

எனவே மேற்கூறப்பட்டுள்ள கொலஸ்ரோலை குருதியில் அதிகரிக்கக்கூடிய காரணிகளையும் சந்தர்ப்பங்களையும் முடிந்தவரை குறைக்கும் பட்சத்தில் நாம் எமது குருதியில் கொலஸ்ரோலின் அளவைச் சீராகப் பேணமுடியும். இதனால் கொலஸ்ரோல் மூலம் எம்மிடையே ஏற்பட்டுள்ள அச்ச உணர்வை தவிர்த்து நோயற்ற வளமான உடலமைப்பை நாமும் பெறுவதுடன் எமது எதிர்காலச் சந்ததியினரும் வளமாக வாழ வழிவகுப்போம்.

Dr. Sebaretnam Francis Almeida
Teaching Hospital
Batticaloa



## குறும்(புப்)பா - 23

இடுப்பெலும்பு பிடிப்பிழந்து போச்சு
கிழக்குதயம் நடக்குதென்று பேச்சு
வடுக்குழியால் வழியெல்லாம் வாகனங்கள் துடிக்கிறது
அடிக்கிறது வைத்தியருக் குதயம்

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இராணுவம் இல்லாத நாடுகள்

**1954**-1956 மட்டும் இலங்கையில் பிரதம அமைச்சராக இருந்த சேர். ஜோன் கொத்லாவல ஓர் இராணுவத் தலைவராக இருந்தவர். ஒன்றரைக் கோடி சனத்தொகை கூடிய நாட்டுக்கு அப்போதே மூன்று இலட்சம் இராணுவம் தேவை எனக் கூறியவர் இவரே. இதை அப்போது பத்திரிகையாளரான எல்மோ குணரத்ன தெரிவித்திருந்தமை சமீபத்தில் ஒரு பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2009ம் ஆண்டு அந்தத் தொகையை அடைந்துள்ளது என்பதை கடந்த முப்பது ஆண்டுகளாக அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தில் இராணுவத்தின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதிலிருந்து அறியலாம். யுத்தம் முடிவடைந்தாலும் கூட இராணுவ எண்ணிக்கை அதிகரிப்பது யாருக்கும் இன்னும் புரியவில்லை.

இலங்கை வரலாற்றைப் பார்க்கும்போது மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் கூட இராணுவம், யுத்தம், படைப் பலம், யுத்தக் கருவிகள் போன்றவற்றிற்கு முன்னுரிமை அளித்துள்ளமையை மகாவம்சம், தீபவம்சம் ஆகிய வரலாற்று நூல்களில் காணக்கூடியதாக இருக்கிறது.

இது இவ்வாறு இருக்க, இராணுவம் இல்லாத நாடுகளென பதினெட்டு நாடுகள் இனங்காணப்பட்டுள்ளன. இவை பற்றி இணையத் தளங்களிலும் காணலாம். அனேகமாக இவ்வாறான நாடுகள் சிறிய தனிமையாக்கப்பட்ட தீவு அரசுகளாகும். முப்படைகளாகிய தரைப்படை, கடற்படை, வான்படை ஆகிய படைகள் இங்கே குறிப்பிடப்பட்ட நாடுகளில் இல்லாவிட்டாலும் அந்த நாடுகளின் பாதுகாப்புக்காக அந்நாட்டுப் பொலிஸ் படை உள்ளது. அல்லது பாதுகாப்புப் பிரிவு ஒன்றால் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அல்லது இன்னுமொரு நாடு அல்லது பல நாடுகள் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுமுண்டு. குறிப்பாக அந்த நாடுகள் இருந்த பாதுகாப்புப் படைகளை சில அரசியல், சமூக, பொருளாதார, சமய காரணங்களுக்காக கலைத்துள்ளன. குறிப்பாக அரச எதிர்ப்பு, இராணுவப் புரட்சி ஆகியவை ஏற்படுவதைத் தவிர்க்கவே படைகளைக் கலைத்தன.

இவ்வாறு பாதுகாப்புப் படைகள் இல்லாத நாடுகள் பின்வருமாறு:

- அன்டோரா (Andora)
- கொஸ்டரிகா (Costarica)
- டொமினிக்கா (Dominica)
- கிறனடா (Grenada)
- ஹெயிட்டி (Haiti)
- கிரிபட்டி (Kiribati)
- லியேச்டென்ஸ்டெயின் (Liechtenstein)
- மாசல் தீவுகள் (Marshall Islands)
- மொரிசியஸ் (Mauritius)
- மைக்ரோனிசியா (Federated States of Micronesia)
- நாவுரு (Nauru)
- பலவு (Palau)
- புனித லூசியா (Saint Lucia)
- செயின்ட் வின்சன் - கிறனிடஸ் (Saint Vincent and the Grenadines)
- சமோவா (Samoa)
- சொலமன் தீவுகள் (Solomon Islands)
- ருவலு (Tuvalu)
- வத்திக்கான் (Vatican City)

**அருட்பணி. ஜோர்ஜ் தீசாநாயக்க**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மூன்று கிறித்தவ தமிழ் இலக்கிய நூல்களின் நூலாராய்வு 04

மத்தித் தரைக்கடலின் வடக்கே உள்ள இத்தாலித் தீபகற்பத்தில் இருந்து, வங்கக் கடலும் அரபிக்கடலும் அலை மோதும் முனை நாடாகிய தமிழகத்திற்கு கிறிஸ்தவ மத ஊழியஞ் செய்யக் கடல் கடந்து வந்த ஓர் இளந் துறவி, தான் புரிய வந்த இறைப்பணிக்கு மொழி ஒரு தடையாக இருப்பதைக் கண்டார். தான் அறிந்த பல ஐரோப்பிய மொழிகள் தமிழ் மொழிபேசும் தமிழக மக்களிடம் பயனற்றுப்போவதையும், அதனால் இறை ஊழியம் ஊமை நடை போடுவதையும் உணர்ந்தார். எனவே அந்நியமான மொழியைக் கற்கும் கட்டாய நிலைக்குட்பட்டார்.

ஒலியமைப்பு, எழுத்தமைப்பு, சொல்லமைப்பு, இலக்கண விதிகள் என்பவற்றில் முற்றும் வேறுபட்ட மொழியைக் கற்க அவர் முயன்று வெற்றி பெற்றார். அதற்காகப் பல இடர்களை அவர் எதிர் கொண்டார். முதலில் அவரைக் கவர்ந்தது அதன் எழுத்து வரி வடிவங்களே! அவற்றுள்ளும் பல வேற்றுமை இருப்பதை அவதானித்தார். அவர் வரும்போது பனை ஓலை நறுக்குகளில் எழுதும் வழக்கமே இருந்தது. அப்போதுதான் கடதாசி மை, பேனா எனும் எழுத்துசாதனம் அறிமுக நிலையில் இருந்தன. எழுத்தாணியின் கூரிய நுனியால் ஓலை நறுக்குகள் பழுதுறா வண்ணம், எழுதத்தக்க எழுத்து வரி வடிவங்களே வழக்கத்தில் இருந்தன.

ஆனால் அவரது கண்களிலே மெய்யெழுத்துகளுக்கே உரிய புள்ளியிடும் வழக்கம் எகரம் ஒகரம் எனும் உயிரெழுத்து இரண்டிற்கும் உயிரடையாளம் ஒன்றுக்கும் இருந்த முரணைக் கண்டார். எனவே இந்த முரண்பாட்டை அகற்ற முனைந்தார். பண்டு தொட்டு பயின்று வந்த இந்த மரபை மாற்றுவதற்கு தமிழ் வல்லார் என்ன சொல்வாரோ, அதைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வாரோ எனத் தயங்கினார். தக்கதை ஏற்று தகாததைத் தள்ளும் தைரியம் மிக்க தைரியநாதன் சரியெனக் கண்டவற்றை செயற்படுத்த முயன்றார். அதைச்செய்த போது தமிழ்ப் புலவர்களும் மக்களும் ஏற்றுக் கொண்டதைக்கண்டு மனம் நிறைந்தார்.

அந்த மாற்றம் அல்லது அவர் செய்த ஒருமைப்பாட்டில் மூன்று வரிவடிவத்தத்துவங்கள் இடம்பெற்றன. முதலாவது மெய்யெழுத்து 18க்கும் உள்ள புள்ளி பெறுதல் பிற எழுத்துகளுக்கு இருப்பது தவறு என்பது. அடுத்தது குறில் உயிர் எழுத்துகள் நெடிலாகும்போது அடையும் உள்ளான மாறுதல் தத்துவம். மூன்றாவதுஉயிரெழுத்துகள், உயிர்மெய்யெழுத்துகள் நெடிலாகும்போது அடையும் உள்ளான மாறுதல் தத்துவம். நான்காவது உயிர் எழுத்துகள் உயிர்மெய் எழுத்துகளை ஆக்கும்போது பெறும் ஒலி அடையாளக் குறிகளில் உள்ள ஒருமைப்பாட்டின்மை என்பது. ஆயினும் அவர் இரண்டே இரண்டு ஒருமைப்பாட்டை வழக்கிற்குக் கொண்டுவர முயன்றார்.

அவர் வந்த காலத்தில் மேழிச்செல்வம் கோழை படாது. ஏர் நடந்தால் பார் சிறக்கும். ஓதுவதொழியேல் என்பதை மெழிச்செல்வம் கொழை படாது, எர் நடந்தால் பார் சிறக்கும். ஒதுவதொழியெல் என எழுதி ெ, எ, ஒ என்பவற்றின்மேலே குற்றுவைத்து எழுதும் வழக்காறு இருந்து வந்தது.

இதிலே எகரத்தை ஏகாரமாகப் புள்ளியிடுவதும் ஒகரத்தை ஓகாரமாக அதன் மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புள்ளியிடுவதும் ஒற்றைக்கொம்பின்மேல் புள்ளியிட்டு ஏகார, ஓகார நெடில் ஓசை ஒலிக் குறிலடையாளமாக்குவதையுந் தவிர்க்க அவர் எகரத்தின் காலை ஏர்க்கொழு வடிவமாக்கினார் ஒகரத்தின் இறுதியில் சுழியிட்டு ஓகாரமாக்கினார். ஏகார ஒலி உயிரடையாளத்திற்குப் புள்ளியிடுவதைத்தவிர்த்து இரட்டைக்கொம்பு வடிவமாக்கினார்.

இதனால் ஏற்பட்ட ஒருமைப்பாடு தக்கதென தமிழ் உலகால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இன்று நாம் எழுதும் ஏகாரம் ஓகாரம் இரட்டைக்கொம்பு எனும் வரிவடிவங்கள் மூன்றும் வீரமாமுனிவர் தந்த பிச்சையென்றால் மிகையன்று, அவர் இன்னும் பல காலம் வாழ்ந்திருந்தால் தமிழ் எழுத்து வரிவடிவங்களில் உள்ள பல முரண்பாடுகள் அகன்றிருக்கும் என உறுதியாகச் சொல்லலாம்.

காப்பியர் காலமிருந்தே சங்கமமைத்து தமிழ் வளர்த்தவர்களின் கருத்திற்கே எட்டாத இந்த மாற்றம் அந்நியரான வீரமாமுனிவரின் கண்ணிற் பட்டது தமிழ் மொழி செய்த பாக்கியமே. இத்தகைய எழுத்துவடிவப் பணி அவரது ஆழ்ந்த புலமைக்கோர் அடையாளம்.

**உலகில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள அணு ஆயுதங்கள் அழிக்கப்படவேண்டும் என்று அமெரிக்க ஐக்கியநாட்டு பால்டிமோர் பேராயர் எட்வின் ஓபிரைன் அழைப்பு விடுத்தார். அணு ஆயுதங்களை ஒழிப்பது அடிப்படையான நன்னெறி மதிப்பீட்டு விவகாரமாகும் என்று கூறினார் பேராயர் ஓபிரைன். 2010ம் ஆண்டில் நடைபெறவுள்ள, அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தம் கொண்டுவருவது பற்றிய ஐ.நா கருத்தரங்கிற்கு, வத்திக்கான் ஆதரவு வழங்குவதையும் பால்டிமோர் பேராயர் குறிப்பிட்டார்.**


# இரண்டாவது; தமிழ்ப்பதங்களின் ஆட்சிபற்றிய பணி

சொல் வளர்ச்சியும் அதன் பயன்பாடுமே மொழியின் வளர்ச்சியைக்காட்டும் அடையாளங்களாகும். இவ்வாறு நாளுக்கு நாள் புதுச்சொற்களைக்கொண்டு பல ஆயிரக்கணக்கான சொற்களைக்கொண்ட தமிழ் மொழியினைப் பயன்படுத்தல் ஒரே வழி மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்து வருகிறது. பொதுவாக மக்கள் தம் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட சொற்களையே அதிகமாகப் பயன்படுத்துவர். அதுபோலத் தாம் செய்யும் தொழில்சார் நுட்பங்களை புதுச்சொற்களாக உருவாக்கி உபயோகிப்பர். இவ்வாறே சொற்கள் பெருகுகின்றன.

ஒரு மொழியிலே உள்ள பல சொற்களைப் பலர் பாவிப்பதே இல்லை. பேச்சுவழக்கிலும் உரை நடைவழக்கிலுங் கூடக் குறைவான சொற்களின் உபயோகமே பயன்படுத்தப்பட்டு வருவது வழக்கம். ஆனால் செய்யுள் வழக்கில் யாப்பு இலக்கணம் வழுவாமற் பாக்களைச்செய்யத் தக்க சொற்தேர்வுகள் அவசியமாகின்றன. எதுகை, அசை, மோனை என்பவற்றை தெளி சந்தமாக்க அளவற்ற சொல்லறிவும், உரியவிடத்து எடுத்தாளும் ஆட்சியும் அதிகம் வேண்டப்படுகிறது. மேலும் பல நூலாசிரியர்கள் பயன்படுத்துஞ் சொற் பொருளை விளங்கிக்கொள்ளவும் சொல் வளந்தேவை. இதற்காக ஒருவர் தமிழ்ச் சொற்கள் யாவற்றையும் அறிந்து நினைவிற்கொண்டு இயங்க முடியாது. இதற்காக சொற்களின் பொருள் பற்றிய சொற்தொகுதிகளைப் பண்டைக்காலத்தில் செய்யுள் வடிவிலாக்கித் தொகுத்து, அவற்றிற்கு நிகண்டெனப் பெயரிட்டனர். தேவ, மக்கள், விலங்கினம், மரம், இடப்பெயர்களைத் தொகுத்து பொருட் பெயர்த் தொகுதியாகவும், செயற்கை வடிவம், பல்பொருள் கொண்ட பெயர்த்தொகுதியாகவும், பண்பு வினை ஒலிச்சொற்களின் தொகுதியாகவும் வகுத்தனர். இவற்றைவிட ஒரு பொருள் தரும் பல சொற்களின் தொகுதியும், பல பொருள் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



"போகிற போக்கைப் பார்த்தால் பிராணிகள் மனித குலத்தை அடிமையாக்கிவிடும் போல் தெரிரிகிறதே"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"பின்னே என்ன? கோழிக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், எலிக் காய்ச்சல் என்று தொடர்கிறதே...!" • மணி

ஒரு சொல் கொண்ட தொகுதிகளாகவுஞ் சொற்களைத் தொகுத்தனர். மேலும் எதுகை வரிசை, பல் பெயர்க் கூட்டத் தொகுதி என்பனவாகவுந் தொகுத்து சொல்லாட்சியை இலகுவாக்கினர். இவ்வாறு எழுந்த நிகண்டுகளாக, சூடாமணி நிகண்டு, சேந்தன் திவார நிகண்டு, பிங்கல நிகண்டெனப் பல தோன்றி சொற் பொருள் தேருஞ் சாதனங்களாக, கைநூல்போல வாய் நூல்களாக வழி காட்டி விளங்கின.

இரண்டாவது : தமிழ் மொழியைக்கற்க முயன்ற வீரமாமுனிவர் இத்தகைய நிகண்டு வகுப்பை இலகுவாக்க எண்ணினார். சொற்களை அகர வரிசைப்படுத்தித் தொகுத்தார். முதலிற் சொல், அதன் பின் சொற்பொருள் என்ற வடிவிற் நிரைப்படுத்தினார். கருத்து விளங்காத சொல்லின் பொருளை அறிய நிகண்டுபோல அங்கிங்கு அலையாமல் சுட்டு விரலே தகவலைப்பெறத்தக்கதாக தமிழ்ச் சொற்களை அகர வரிசைப்படுத்தினார் மேல் நாட்டிற் பயன்பட்ட அகராதி முறையில் ஒரு தமிழ் நூலைச் செய்து அதற்குச் சதுரகராதி எனப் பெயரிட்டார்.

இந்த முதல் அகராதி, இன்று பல வகையான அகராதிகளாக வளர்ந்துள்ளதை அறியும்போது அவர் செய்த தமிழ்ப்பத ஆட்சி வழியின் மேன்மை தெளிவாகின்றது. இதைவிட தமிழரல்லாதார் தமிழைக் கற்க, லத்தின் - தமிழ், போர்த்துக்கேய தமிழ் அகராதிகளையும் படைத்தார். அவற்றின் விபரங்கள் :

***1. 1732 - சதுரகராதி. மீள் பதிப்புகள் 1824, 1834, 1845, 1848, 1857, 1861, 1872, 1880, சென்னைச்சங்கம் : 1823 : 399 பக்கங்கள் சென்னை பப்ளிக் இனட்ரக்சன் பிர1860. 600 பக்கங்கள்***

***இதன் வழி தோன்றிய தமிழ் அகராதிகள் : பெப்ரி சியஸ், ராட்லர், வின்சலோ.***

***2. 1741 தமிழ் லத்தின் அகராதி மீள் பதிப்பு 1827***

***3. தமிழ் போர்த்துக்கல் லத்தின் அகராதி என்பன.***

## மூன்றாவது : தமிழ் உரை நடை அறிமுகம்

அடுத்ததாக இவர் தமிழிற்குச் செய்த மகத்தான பணிகளில், தமிழ் உரைநடை அறிமுகமும், வளர்ச்சியும் ஒன்றாகும். இவரது வருகைக்கு முன்னரே உரை நடை வழக்காறு தமிழில் வழக்கிலிருந்தாலும், அவை செய்யுள்களின் பொருளைத் தெளிவாக்கும் போக்குடையனவாக இருந்தன. இவரின் பரமார்த்த குருவின் கதை போன்ற உரை நடை நூல்கள் தமிழ்ப் பயன்பாட்டில் வசன நடையாக வளர்ந்தது. இன்று பல நூல்கள் இந்த வசன நடையிலே படைக்கப்படுவதற்கு ஏர் கோலிட்டவர் வீரமாமுனிவர் எனில் மிகையன்று. அவரது வசன நடை நூல்களின் விபரம் :

***01. 1882 பரமார்த்த குருவின் கதை. மீள்பதிப்பு : 1853 இதன் தமிழ்ப்பதிப்பு***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

*1859, 1865 பெஞ்சமின் பெபிங்டனின் ஆங்கிலப்பதிப்பு, டுபாயிற் பிரஞ்சுப் பதிப்பு 1877, கன்னடப்பதிப்பு 1877 தமிழ் லத்தின் பதிப்பு, 1851 மீள்பதிப்பு 1889.*

2. *வேத விளக்கம் 1727, மீள்பதிப்பு 1728, 1828, 1868, புதுவை மாதா கோவில் அச்சகம் 1918 281*

3. *பேதக மறுத்தல் 1858 மீள்பதிப்பு 1858, 1863, 1898,*

4. *லூத்தேரினத்தியல்பு 1842, மீள்பதிப்பு 1847, 1858*

5. *வேதியரொழுக்கம் 1730 மீள் பதிப்புகள்: 1841, 1858, 1888, 1898, ரிசியசு ட்ராக்ட் அண்டி புக்சொசைட்டி 1898 167 டிரிங்காலின் லத்தின் பெயர்ப்பு 1861 கென்னடியின் தெலுங்குப் பதிப்பு 1891 பிஷப் சர்பொன்னே கன்னடப் பெயர்ப்பு 1891*

6. *திருச்சபைக் கணிதம் 1745*

7. *ஞான உணர்த்தல் டிரிங்காலின் இலத்தின் பெயர்ப்பு 1881 செல்வத்தின் தெலுங்குப்பதிப்பு 1861 வில்லியம் டெயிலரின் கன்னடப்பதிப்பு 1878*

8. *பதிதர் பேரில் நிருபம் 1725 காண்கில்சு 1523 155 பக்கங்கள், கழகப் பதிப்பு 1951 1954 1957 1960 விரமாமுனிவர் தமிழ் ஆய்வுக்கழகம் அருளானந்தர் கல்லூரி கருமாந்துார் 1973. 78*

9. *திருக்குறள் இலத்தின் மொழி பெயர்ப்பு ஐந்ததிகாரங்கள். வீரமாமுனிவர் தமிழாய்வுக்கழகம் அருளானந்தர் கல்லூரி கருமாந்துார் 1973. 78*

**கனடாவிலிருந்து.......... ஈழத்துப் பூராடனார்**

## கொழும்பு மறைமாவட்டத்தின் பேராயராக மல்கம் ரஞ்சித் ஆண்டகை பதவியேற்றார்



கொழும்பு மறைமாவட்டத்தின் புதிய பேராயராக பேரருள்தந்தை டொன் அல்பேட் மல்கம் ரஞ்சித் ஆண்டகை பொறுப்பேற்றார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் நடைபெற்ற விசேட ஆராதனையின்போது முன்னாள் பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகையிடமிருந்து பொறுப்புகளைச் சம்பிரதாயபூர்வமாகப் பெற்றுக் கொண்டார்.

திருத்தந்தையால் பேராயராக நியமிக்கப்பட்ட இவர் முன்னர் வத்திக்கான் திருப்பீடத்தில் பணியாற்றியவர். அத்துடன் வத்திக்கானுக்கு வெளியே திருத்தந்தையின் திருத்தூதராகவும் பணியாற்றியவர். பன்மொழி வல்லுனரான ஆயர் ரஞ்சித் அவர்கள் இன ஐக்கியம், சமாதான சகவாழ்வு போன்றவற்றில் ஆர்வம் மிக்கவர் என்பது குறிப்படத்தக்கது.



## குறும்(புப்)பா - 24

பன்றியெலி நுளம்பெல்லாம் பகையாம்
பரிதவித்து நிற்கிறது உலகம்
என்றியற்கை அழித்துஅபி விருத்திகாண முயன்றானோ
அன்றுமுதல் வந்ததம்மா அழிவு


~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

– பைந்தமிழ்க் குமரன் டேவிட் –

● சிறுகதை



# காயங்கள்

சலசலப்புகள் அடங்கியது....

"குட்மோனிங் ரீச்சர்..." கோரசாக ஒலித்தது மாணவிகளது குரல்.

"குட்மோனிங் பிள்ளயள்... சிற்டவுன்" என்றேன், அமர்ந்தார்கள்.

"டியே டிலுக்சி தமிழ்ப் பாடத்துக்குப் புது ரீச்சர் வந்த எண்டு நம்மட சமயபாட பிந்துகோஸ் சொல்லித்துப் போனாவுதானே... இவதாண்டி..."

"டியே சத்தம் போடாத காதில விழுந்திரும்"

"மது இவதாண்டி நம்மட புது ரீச்சர்"

"துவாரகா கொஞ்சம் பாரன் புது ரீச்சர்ர கெயா ஸ்ற்ரைல் எப்பிடியெண்டு பாரன்"

"சும்மா இருடி... பாத்தா ஒரு நாப்பது வயதிருக்கும். சாறி கட்டத் தெரியாது போல... அதுக்கு நம்மட இங்கிலிஸ் ரீச்சர் இருக்கா... சும்மா திரிஷா மாதிரி.. சொல்லி வேலல்லப்பா..."

நான் சுருக்கமா என்னை அறிமுகப்படுத்திக்கொண்டு பாடத்தைத் தொடங்கினேன். வகுப்பறையை பரவலாக நோக்கியபடியே மந்தரை சூழ்ச்சிப் படலப் பாடலொன்றைப் பாடி சந்தி பிரித்துக் கூறியபடியே செய்யுளின் பொருளை விளக்கியபோது மூன்றாம் வரிசையில் இருந்த ஒரு பிள்ளையைப் பார்த்து

"உங்கட பேரென்ன...?" என்றேன்.

சற்றுப் பயந்த முகத்துடன் எழுந்தாள்.

"தீபா" என்று கூறினாள்.

அழகான முகவெட்டு, குறுகுறுவென்ற கண்கள்... ஆனால் தலைமுடி மிகக் கட்டையாக வெட்டப்பட்டு... எனக்குள் ஒரு சிறிய தடுமாற்றம். மந்தரையை இன்னுமொரு பெயரால் அழைப்பது வழமைதானே அந்தப் பெயர் தெரியுமா? என்று கேட்க நினைத்த கேள்வி அமுங்கிப் போக....

"உன்ர தலமுடிய ஏ...ஏனிப்பிடி..." என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கேட்டேன். அவள் தலைகுனிந்தாள்.

முன்வரிசைப் பிள்ளைகள் "ரீச்சர் அவ இல்லத்தில இருக்கிறவ. அவ மட்டுமில்ல அந்தா... அந்த நிரோஷா, விதுஷா, தக்ஷாயினி எல்லார் தலமுடியும் இப்பிடித்தான் ரீச்சர். அது இல்லத்தில இருக்கிற பிள்ளைகளுக்கு இப்பிடித்தான் கட்டையா வெட்டி விடுவாங்க"

நான் சமாளித்தேன் "ஆ...ஆ... அப்பிடியா... பரவாயில்ல.. தீபா இருங்க" என்று கூறிவிட்டு பாடத்தைத் தொடர்ந்தேன். பெல் அடித்தது. மீண்டும் சலசலப்புகள். நான் வெளியேறினேன்.

•••

வாசலில் ஒன்றரை இலட்சத்தை விழுங்கிய மோட்டார்பைக் படபடத்து ஓய்ந்தது. முன்கததைவத் திறந்த பிரபா முகம் மலர்ந்தாள். பைக்கில் தன் முதுகுக்குப் பின்னாலிருந்த பேக்கை கையிலெடுத்துக்கொண்டு நுழைந்தான் சபாபதி.

"வந்தீற்றீங்களா...? நேத்தையில இருந்து வழி பாத்துப் பாத்துக் கண்ணும் பூத்துப் போச்சி"

இலேசாகச் சிரித்தான் சபாபதி. "என்னதான் செய்ய பிரபா... என்ர நிலம உனக்கு நல்லாத் தெரியுந்தானே. இந்தா முந்தநாள் பின்னேரமா கடக்கரைப் பக்கமா மீன் மலிவு. கருங்கண்ணிப் பாரக்குட்டி கிலோ இருநூத்தம்பது. பின்ன வாங்கி புஸ்பாட்ட குடுத்தன்.

வழக்கம்போல றூமில இருக்கிற உங்கட பிரண்டுக்கும் சேத்துத் தானே சாப்பாட்டுப் பார்சல் எண்டு கேட்டா... தலய ஆட்டினன். ம்...ம்...ம்.... இந்தா பாரக்குட்டிப் பொரியலோட ரெண்டு பார்சல்.." அவன் நீட்டிய பையை பிரபா வாங்கிக் கொண்டாள்.

# இருவரிக் கவிதைகள்

**குருக்கள்:** *இறைவன் பாதத்தில்*
*மணம் வீசும் மலர்கள்*

**அழைப்பு:** *எல்லோருக்கும் உண்டு. ஏனோ*
*இறையழைப்பை ஏற்பதில் யோசனை*

**திருவிவிலியம்:** *நூலகம்*
*வாசகர்கள்குறைவு*

**சிலுவை:** *அவமானத்தின் சின்னம்*
*புனிதமாகியது ஒருவரால்*

**தேவாலயம்:** *மூடப்படும் நேரத்தைவிட திறந்திருக்கும்*
*நேரமே அதிகம். ஆனால், பக்தர்கள்....?*

**புனிதர்கள்:** *புகழப்பட வேண்டியவர்கள்*
*வேண்டிய மட்டும் இகழ்ந்து விடாதே*

**அன்பு:** *செய்வது நன்று; அடிமையாகாகமல்*
*இருப்பது அதைவிட நன்று*

**நம்பிக்கை:** *நம்பி கை வை*
*தும்பிக்கைப் பலன் பெறுவாய்*

**திருப்பலி:** *கல்வாரி மேடையின்*
*உச்சக்கட்ட நிகழ்வு*

**செபமாலை:** *தினமும் சொல்லிப்பார்*
*வாழ்க்கையில் திருப்பம் வரும்*

**குருத்துவம்:** *புனிதம் மிக்கது*
*பல புனிதர்களை உருவாக்கியது*

**- க. கியூரி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



"டெங்கு நோயைத் தீர்ப்பதற்கு கியூபாவிலிருந்து பக்டீரியா கொண்டு வருவதை எதிர்க்கட்சித் தலைவர் ஆட்சேபிக்கிறார்"

"என்ன காரணம்"

"உள்நாட்டுப் பிரச்சினையில் வெளிநாட்டவர் தலையிடக்கூடாதாம்" • மணி

மனசு குறுகுறுத்தது. யுத்தம் தகப்பனையும், தமையனையும் தின்றுபோட தாயுடன் தனித்துப்போன பிரபாவை சபாபதி வீட்டில் வேலைக்காக தாய் சேர்த்துவிட்டாள். சபாபதியின் மனைவி புஸ்பா அமைதியும் அடக்கமும் கொண்டவள். உலகம் தெரியாதவள். பிள்ளைப் பேற்றிற்காக ஆஸ்பத்திரியில் மூன்று நாட்கள் தங்கி பெண் பிள்ளையொன்றைப் பெற்றெடுத்தாள். அந்த நாளில்தான் சபாபதி பிரபா மேல் கையை வைத்தான். அவளுக்கு இருபது வயது. வேறு வகையறியாமல் சம்மதித்தாள்.

சபாபதிக்கு வேலை றிங்கோவில். "புஸ்பா.. அவளும் வயசுப் பொட்ட. பெரியம்மாக்காறியோ ஆரோவாம்... ஊரோட போகப் போறாளாம். என்னத்தயும் பாத்துப்பாராம குடுத்து அனுப்பிவிடு... நம்மட புள்ளைக்கும் முப்பத்தொண்டு முடிஞ்சிதானே..." என்ற கணவனின் பேச்சில் ஏமாந்து மெல்லிய ஒரு செயின், சாறிகள் சட்டைகள் இவற்றோடு ஐயாயிரம் ரூபா காசும் கொடுத்து அனுப்பினாள் புஸ்பா.

விடை பெற்ற பிரபா அன்று இரவு றெயினில் சபாபதியின் மடியில் தலைவைத்து உறங்கியபடியே பயணித்து றிங்கோ வந்து இந்த அனெக்ஸில் ரெண்டு வருஷமாக அவனுடன் குடும்பம் நடத்துகிறாள். முன்பெல்லாம் கிழமைக்கு ஒருமுறை ஊருக்குப் போய் வருவான். வரும்போது என்னோட றூமில தங்கியிருக்கிற பிரண்டுக்கு எண்டு சொல்லி வடை, முறுக்கு, சோற்றுப் பார்சல்கள் புஸ்பாவிடம் வாங்கிக் கொண்டுதான் வருவான். இந்த ஏமாற்று வாழ்க்கை எத்தனை நாளைக்கு...? இது கடவுளுக்கே ஏற்குமா? அப்படிப் பார்த்தால் தன்னுடைய நிலமை... பிரபா தனக்குள் திண்டாடினாள்...

•••

"பிறகென்ன தீபா நடந்தது..?" நான் கேட்டேன். வேறு யாராவது வருகிறார்களா என்று திரும்பிப் பார்த்த அவள் கண்களைத் துடைத்தாள். "எங்கட அம்மா.. பாவம்.. ரீச்சர். மால.. காப்பு... நகையெல்லாம் ஒண்டொண்டா அப்பா வாங்கி... கடைசியில என்னையும் அம்மாவையும் அப்பா கைவிட்டிட்டுப் போயித்தாரு ரீச்சர்.

## தொண்டன் விலை உயர்வு

இந்த இதழ் முதல் தொண்டன் பிரதி ஒன்றின் விலை ஐந்து ரூபாவால் உயர்கிறது. நமது நாட்டில் நாளும் பொழுதும் உயர்ந்து வரும் பல்வேறு விலை உயர்வுகளுக்கு மத்தியிலும் ஏறத்தாள மூன்று ஆண்டுகளாக தொண்டன் விலை உயர்த்தப் படாதிருந்ததை வாசகர்கள் அறிவார்கள். வெளிவரும் மாத சஞ்சிகைகளோடு ஒப்பிடுகையில் தொண்டனின் விலை மிகக் குறைவு என்பதை வாசகர்கள் கண்டுகொள்ளலாம். பெருகும் சுமைகளைச் சிறிது குறைப்பதற்காக மேற்கொண்டுள்ள இந்தச் சிறிய விலை உயர்வை ஏற்று தொண்டன் வாசகர்கள் தொடர்ந்தும் ஆதரவளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம். இதற்கேற்ப தொண்டன் பிரதி ஒன்றின் விலை இனி 25/= ரூபாவாகும்.

– ஆசிரியர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அம்...அம்மாவுக்கு ரீபி வருத்தம் வந்து... வந்து..." விசும்பினாள். என் கண்கள் கனத்து கண்ணீர் துளிர்த்தது. அவளை இழுத்துத் தோளோடு சாய்த்துக்கொண்ட போது...

"அம்மா... அம்மா... சாமியிட்ட... சாமிற்ற போயிற்றா ரீச்சர்... என்னய சிவராம் அங்கிளும் அன்ரியும் கூட்டி வந்து இந்த ஸ்கூலோட இருக்கிற இல்லத்தில் சேத்து விட்டிட்டாங்க. அப்பா... அம்மாவின்ர சாவுக்குக்கூட வரல்ல... ரீச்சர்.." விக்கி விக்கி அழுதாள்.

அவள் முதுகை ஆதரவாகத் தடவி விட்டபோது "இறைவா இப்படி எத்தனை எத்தனை தீபாக்கள் இந்த இல்லத்தில் இருக்கிறார்களோ..." ஏக்கப் பெருமூச்சொன்று விடைபெற்றது.

மணியொலித்தது, இடைவேளை முடிந்து மாணவிகள் வகுப்பறைகளுக்குச் செல்கின்றார்கள். அதே குட்டைத் தலைமயிருடன் நான்கு மாணவிகள் வந்து...

"தீபா... பெல் அடிச்சிற்றுது. மெற்ஸ் ரீச்சர் வருவாவு. கிளாசுக்குப் போறல்லயா..."

என்றபோது தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டாள். நான் அப்போதுதான்...

"தீபா உங்கட அம்மாவின்ர பேரென்ன சொன்னா பிள்ள.." என்றேன்.


"அம்மாவின்ர பேர் புஸ்பா.. நா..நான்... கிளாசுக்குப் போறன் ரீச்சர்" என்றாள். நான் நிமிர்ந்து அவளைக் கூப்பிட்ட அந்த நான்கு முகங்களையும் பார்த்தேன்; சிரித்தார்கள்.

"என்ன ரீச்சர் அப்பிடிப் பாக்கிறீங்க.." என்றாள் ஒருத்தி.

"எங்களப் பத்திக் கவலப் படுறீங்களா ரீச்சர்.." என்றாள் மற்றவள்.

எதுவுமே பேசாமல் உதட்டைக் கடித்துக்கொண்டு தலையை ஆட்டினேன். ஐவரும் நடந்து மறைந்தார்கள்.

**வியட்நாமில் போர் நடந்தபோது குண்டுவீசித் தாக்கப்பட்ட தலத் திருச்சபை நிலத்தில் வழியாடு நடத்துவதற்கு வியட்நாம் அரசு விதித்திருக்கும் தடையை எதிர்த்து ஐந்து இலட்சம் கத்தோலிக்கர் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். நாடு முழுவதும் ஒரே நேரத்தில் இவ்வளவு பெரிய அளவில் ஒரு சமயப் போராட்டம் நடத்தப்பட்டது வியட்நாமின் வரலாற்றில் இதுவே முதல் முறையாகும். இதே வேளை நேபாளத்திலிருந்து கத்தோலிக்கக் குருக்கள் வெளியேற வேண்டும் என்று தீவிரவாத அமைப்புகள் அச்சுறுத்தி வருகின்றன.**



"வெளிநாட்டில் உள்ள தமிழர்களை எல்லாம் திருப்பி அழைக்கப் போறாங்களாம்"

"சரிதான் நிவாரணக் கிராமங்களும், அகதிமுகாம்களும் அதிகரிக்கப் போகின்றன"

• மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# உரோமைப் பேரரசில் வேத கலாபனைகள்


முதல் 3 நூற்றாண்டுகளிலும் திருச்சபையானது உரோமைப்பேரரசின் நகரெல்லாம் மிகத் துரிதமாய்ப் பரவியது. இதனால் கிறிஸ்தவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு சென்றது. இதனால் அனைவரின் கவனமும் கிறிஸ் தவர்களின் பக்கமே இருந்தது. இக்கால கட்டத்தில் கிறிஸ்தவம் அல்லாத பல கீழைத்தேய மதங்கள், வழிபாட்டு முறைகள் பேரரசினுள் நுழைந்தன. இதனை உரோமையருள் சிலர் எதிர்த்தனர்; வேறு சிலர் இப்புது மதங்களைப் பின்பற்றியும் இருந்தனர். இதனால் பல தடவைகள் இவர்களுக்கும் யூதர் களுக்கும் இடையில் சில பிரச்சினைகள் எழுந்தன. இதனால் யூதர்கள் உரோமையரை, புறஇனத்தவர்களை இழிவாகக் கருதி அவர்களுடைய அனைத்தையுமே வெறுக்கத்தொடங்கினர். இவ்வாறான நிலையில் சந் தேகமும், வெறுப்பும், பகையும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே சென்றது. இதனால் ஏனைய மதங் களையும் தீய சக்தியெனக்கருதி புறக்கணிக்க லாயினர். கிறிஸ்தவமே உண்மையான மதம் எனக் கருதி புறவினத்தாரின் வெறுப்பினைச் சம்பாதித்துக் கொண்டனர். இவ்வாறான நிலையில் தோன்றியவைகளே உரோமைக்கலாபனைகள் பத்து ஆகும். இவை களின்போது அதிகமானோர் வேதசாட்சிகளாய் மரித்தனர். அவை பின்வருமாறு:

- முதலாவது கலாபனையானது 64ல் நீரோ மன்னனால் ஏற்படுத்தப்பட்டது. இக்கலாபனையில் புனித பேதுரு, புனித பவுல் போன்றோர் தலை கீழாய் அறையப்பட்டும், வாளால் வெட்டியும் கொல்லப்பட்டனர். கிறிஸ்தவர்களை மனுக்குலத்தின் சத்துராதிகள் எனக்கருதினான். உரோமை நகரை தீ வைத்து விட்டு அப்பழியை கிறிஸ்தவர்கள் மேல் சுமத்தினான்.
- இரண்டாவது கலாபனையானது தொமி சியனால் 93ல் இடம் பெற்றது. இவன் தன்னை ஆண்டவர் எனக்கருதி, அதனை ஏற்க மறுத்தவர் களைத் துன்புறுத்தினான். இக்காலாபனையிலே திமோத்தேயு, பெலவேந்திரர், யோவான் போன்றோர் வேத சாட்சிகளாய் மரித்தனர்.
- மூன்றாவது கலாபனை திராஜன் அதிரியான் அந்தோனின் ஆகியோரால் 103ல் இடம்பெற்றது. இக் கலாபனையில் சிமியோன், கிளமன்ற், அந்தியோக்கு இன்னாசியார், பொலிக்காப்போன்றோர் மரித்தனர்.
- நான்காவது கலாபனை மாற்கு அவு ரேலியன் காலத்தில் 166ல் இடம் பெற்றது. உலகில் ஏற்படும் அனைத்துத் துன்பங்களுக்கும் காரணம் கிறிஸ்தவர்களே எனும் மூடநம்பிக்கையினால் இடம் பெற்றது. சிசிலியம்மாள், பிலந்தின் அம்மாள், போதில், யுஸ்தின் போன்றோர் அதில் மரித்தனர்.
- ஐந்தாவது கலாபனை செப்திமுஸ் செவரஸ் ஆட்சியின்போது 202ல் நடந்தது. இங்கு கிறிஸ் தவர்கள் தொகை அதிகரித்தால் சாம்ராஜ்ஜியத்திற்கே ஆபத்து எனக்கருதி புதுக் கிறிஸ்தவர்களை அழிக்க முற்பட்டு 19000ம் பேர்வரை கொல்லப்பட்டனர். இதில் பேர்பத்துவா, பெலிசித்தம்மாள், இரனியுஸ் போன் றோர் அடங்குவர்.
- ஆறாவது கலாபனை மாக்சிமினஸ் காலத்தில் 235ல் இடம் பெற்றது. பாப்புமார் ,ஆயர்கள், குருக்கள், இதில் அதிகம் துன்புறுத்தப்பட்டனர்.
- ஏழாவது கலாபனை தேசியஸ் காலத்தில் 249ல் இடம் பெற்றது. இங்கு கிறிஸ்தவர்கள் தொகை 1/3 பங்காய் இருந்ததினால் கொல்வதைவிட மாற்றுத்திட்டம் கொண்டுவரப்பட்டது. அத்தாட்சிப் பத்திரம் பெற வேண்டும் என்பது. இதில் பாப்புப் பவியான், கொர்நேலியுஸ், அகத்தம்மாள் போன் றோர் மரித்தனர்.
- எட்டாவது கலாபனை வலேரியன் காலத்தில் 257ல் இடம்பெற்றது. இதில் கிக்துஸ், லோறன்ஸ், சிறில் சிப்ரியான் போன்றோர் மரித்தார்கள்.
- ஒன்பதாவது கலாபனை அவுரேலியன் காலத்தில் 274ல் இடம்பெற்றது. சூரியக்கடவுள் மேல் கொண்ட பைத்தியத்தினால் தோன்றியது. இதில் பாப்பு பெலிகஸ்தேனிஸ், கொனோன் போன்றோர் மரித்தார்கள்.
- பத்தாவது கலாபனை 303ல் தியோக்கிளே சியன் காலத்தில் இடம்பெற்றது. இக்கலாபனையே ஏனைய எல்லாக்கலாபனைகளிலும் பார்க்க மிகக் கொடியதும் நீண்டதுமாய் இருந்தது. இக்காலத்தினை "மறைசாட்சிகளின் யுகம்" என அழைப்பர். அரசும் நான்காகப் பிரிக்கப்பட்டு தியோக்ளெசியன், கலேரியு மாக்சிமியன், கொன்ஸ்தனஸ் போன்றோர் ஆட்சி செய்தனர். இக்கலாபனையில் மரித்தவர்கள் புனித செபஸ்தியார், மொரிஸ் அக்னஸ், விக்டர் குலேந்திரன் போன்றோர் ஆவர். இக்கலாபனையின் இறுதிக் கட்டத்தில் மறை நூல்கள் எரிக்கப்பட்டன, ஆலயங்கள் தகர்க்கப்பட்டன, ஒன்றுகூடல்கள் தடைசெய்யப் பட்டன, அதிகமானோர் மரித்தனர். இவ்வாறாக இக் கலாபனையுடன் திருச்சபையில் ஒரு புது யுகமும் பிறக்க வழி கிடைத்தது. எனவே இவ்வாறான அனைத்துத் துன்பங்களிலும் வேதசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாக மாறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' இம்முறை நாம் சந்திப்பது திருவாளர் அருணாசலம் சிவனேசராசா அவர்களை. மட்டக்களப்புப் புகையிரத நிலையத்தின் பிரதம நிலைய அதிபரான இவர் எம் கண்களை எப்போதும் கவர்ந்து கொண்டிருப்பவர். அவரை எப்படியாவது தொண்டனின் சில நிமிடங்களிற்காக சிறைப்பிடிக்க வேண்டுமென்று நாம் செலவிட்ட நாட்கள் பல. சொன்னால் நம்பமாட்டீர்கள் சுமார் இரண்டு வருடங்களாக அவரைத் தொடர்பு கொண்டோம். அவரது வேலைப் பளு, ஓயாது உழைக்கும் தன்மை, அதற்கு மேலாகத் தன்னை இனங்காட்டிக் கொள்ளாது பத்திரிகையில் பேட்டி கொடுக்கும் அளவிற்கு தான் பெரிய மனிதன் அல்ல என்ற தன்னடக்கச் சிந்தனை என்பன காரணமாக அவர் எம்மைத் தவிர்த்து வந்தார், என்றாலும் 'விக்ரமாதித்தனாக' நாம் அவரை விடவேயில்லை.

திரு.அ.சிவனேசராசா அவர்கள், முதலைக்குடாவில் உள்ள பிரபல்யமான குடும்பமொன்றின் மூன்றாவது பிள்ளையாக 1950ம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தையார் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளராகக் கடமையாற்றியவர்.

இனி அவருடனான நேரடி உரையாடலுக்கு வருவோம்.

**✽ உங்களது ஆரம்பக் கல்வி வாழ்க்கையைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்.**

☀ நான், எனது ஆரம்பக் கல்வியை முதலைக்குடாவில் உள்ள பாடசாலையில் பெற்றேன். அப்போதும் 5ம் வகுப்பில் புலமைப் பரிசில் பரீட்சை இருந்தது. அப்பரீட்சையில் நான் சித்தி பெற்றேன். அதன் பயனாக வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தில் (தற்போது கிழக்குப் பல்கலைகழகம் உள்ள கட்டிடத் தொகுதியில்தான் வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயம் அமைந்திருந்தது) அனுமதி பெற்றேன். பின்னர் 1965ம் ஆண்டு ஆங்கில மொழி மூலத்தில் க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்தேன். பின்னர் 1967ம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பௌதிகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் தோற்றினேன். தொடர்ந்து தொழிலில் இணைந்துகொண்ட பின் முகாமைத்துவ டிப்ளோமா (DIM), முகாமைத்துவக் கல்வி இளமாணி சிறப்புப் பட்டம் (BMS HONS), மனிதவள முகாமைத்துவ விசேட பட்டம் என்பன வற்றைப் பெற்றுக்கொண்டேன். (இவற்றைப் பற்றிச் சொல்லும்போது மனிதர் பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டுகள், மாதம், திகதி, சுட்டெண்கள் என்பன வற்றையெல்லாரம் மனப்பாடமாக மளமளவென்று சொல்கிறார்)

**✽ எப்படி புகையிரதத் திணைக்களத்தில் இணைந்தீர்கள்?**

☀ க.பொ.த உயர்தரம் படிக்கும்போதே வர்த்தமானியில் மத்திய எழுதுவினைஞர் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரியிருந்தார்கள். அதில் ரயில்வேப் பகுதிக்கு நான் விண்ணப்பித்தேன். அதில் உயர் சித்தி பெற்றவர்களை நேர்முகப் பரீட்சையின் பின் உதவிப் புகையிரத நிலைய அதிபர்களாக நியமனம் செய்தார்கள். 33 பெரும்பான்மை இனத்தவர்களும் 7 தமிழர்களும் இவ்வாறு தெரிவுசெய்யபட்டனர். அறுவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். நான் மட்டுமே மட்டக்களப்பைச் சேர்ந்தவன். இதன்படி 1969 ஜனவரியில் கொழும்பில் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்பட்டேன்.

**✽ உங்கள் பணித்தளங்கள் பற்றிச் சொல்ல முடியுமா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

☀ கொழும்பு, வெலிகந்த, ஏறாவூர், மட்டக்களப்பு போன்ற புகையிரத நிலையங்களில் உதவிப் புகையிரத நிலைய அதிபர், புகையிரத நிலைய அதிபர் போன்ற பதவி நிலைகளில் கடமை புரிந்தேன். பின்னர் வகுப்பு 01ல் தரமுயர்வு பெற்றுக்கொண்டு 1989ம் ஆண்டு தொடக்கம் பிரதான புகையிரத நிலைய அதிபராகக் கடமை புரிகின்றேன்.

**❀ புகையிரதத் திணைக்களத்தில் எவ்வகையான பிரிவுகள் காணப்படுகின்றன?**

☀ போக்குவரத்துப் பிரிவு, பொறியியல் பிரிவு (பாதைகள், இயந்திரவியல், மின்னியல், சமிக்ஞைகள்), நிர்வாகப் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு, கணக்காளர் பிரிவு போன்ற பிரிவுகள் காணப்படுகின்றன. எம்மைப் போன்றவர்கள் போக்குவரத்துப் பிரிவிற்குள் வருவோம்.

**❀ சமிக்ஞைகள் பிரிவு என்றால் என்ன?**

☀ பொல்காவெல புகையிரத நிலையம் தொடக்கம் பாணந்துறைவரை புகையிரதப் பாதைகளில் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்விளக்குகள், பாதை மாற்றல்கள் என்பன மருதானையில் உள்ள பிரதான கட்டுப்பாட்டு அறையினாலேயே கட்டுப் படுத்தப்படுகின்றன. அவ்வறையின் சுவர்களில் புகை வண்டிகள் செல்வது சிவப்பு சமிக்ஞைகளின் நகர்வு மூலம் அவதானிக்கப்படும். ரயில் வண்டியொன்றை ஒரு பாதையிலிருந்து மற்றைய பாதைக்கு மாற்று வதனை இக்கட்டுப்பாட்டறையே செய்கின்றது. கட்டுப் பாட்டறையின் சுவரிலுள்ள ஆளிகளை இயக்குவதன் மூலம் இச்செயற்பாடு மேற்கொள்ளப்படுகிறது.

மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா பாதைகள் அனுராதபுரக் கட்டுப்பாட்டறையால் தொலைபேசி அறிவுறுத்தல் மூலம் செயற்படுத்தப் படுகின்றன. பாதை மாற்றல் விவகாரங்கள் அவ்வப் புகையிரத நிலையங்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

**❀ மட்டக்களப்புப் புகையிரதப் பாதைகளில் எல்லா வகையான ரயில் எஞ்சின்களும் வர இயலாது என்று கூறுகின்றார்களே...?**

☀ இல்லையில்லை! இப்போது பாதைகள், பாலங்கள் எல்லாம் திருத்தப்பட்டுவிட்டன. எந்த வகையான எஞ்சின்களும் இப்பாதையைப் பயன்படுத்தலாம்.

**❀ உங்கள் சேவைகளைப் பாராட்டி 'தேசபந்து' என்ற பட்டம் வழங்கப்பட்டதாக அறிகின்றோமே! அது பற்றி...**

☀ எனது புகையிரத நிலைய அதிபர் சேவையை மதிப்பீடு செய்து 2008 ஆகஸ்ட் 4ம் திகதி 'தேசபந்து' எனும் பட்டத்தை அமரபுர பீட மகாநாயக்கர்கள், ஏழு உபநாயக்கர்கள் என்போர் ஒப்பமிட்டு வழங்கினார்கள். அத்துடன் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் அகில இலங்கைச் சமாதான நீதவான் பட்டத்தையும் நீதியமைச்சு எனக்கு வழங்கியுள்ளது.

**❀ உங்கள் சேவையில் மறக்க முடியாத சம்பவங்கள், மன நிறைவைத் தந்த சம்பவங்கள் எவை?**

☀ நான் ஏறாவூரில் பணியாற்றியபோது ஒரு கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது. அதில் கொள்ளையர்களால் நான் தாக்கப்பட்டேன். எனது முயற்சியால் மட்டக்களப்பிற்கான ரயில்வே சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. 1990 ஜூன் 11 அன்று இடை நிறுத்தப்பட்ட புகையிரத சேவைகள் 1990 டிசம்பர் 18ம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. எனினும் 1996ல் அவ்வொரு சேவையும் நிறுத்தப்பட்டது. பின்னர் 2003 டிசம்பர் 25ம் திகதி மீண்டும் அதனைத் தொடங்க வைத்தேன். பின்னர் அச்சேவை 2004 டிசம்பரில் 'மீனகயா' எனும் பெயரில் 'நகர் சேர் கடுகதி' சேவையாக மாற்றப்பட்டது. 2009 ஏப்ரல் 06ம் திகதி 'உதய தேவி' மீண்டு ம் ஆரம்பிக்கப்பட ஆவன செய்தேன்.

தற்போது மட்டக்களப்பு - கொழும்பு ரயில்வே சேவைகள் மூன்று இடம்பெறுகின்றன. மட்டக்களப்பு - பொலன்னறுவை ரயில் பஸ் சேவை நடை பெறுகிறது. மட்டக்களப்பில் இருந்து திருகோண மலைக்குச் செல்வதற்கு மட்டுமான நேரடி ரயில் சேவையொன்று நடைபெறுகின்றது. இது தவிர சரக்கு ரயில் சேவைகளும் நடைபெறுகின்றன.

*ஈற்றில் தொண்டனின் சார்பில் நன்றி கூறி விடை பெற்றுக்கொண்டோம்.*

**- ஆழியோன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அடிக்கடி தொலைந்து போகின்றவன்

- அ.ச.பாய்வா -



நான் பார்க்கும் போதெல்லாம்
எனது கண்ணாடிக்குள்
இரண்டு கொள்ளிவாய்க் கண்கள்
என்னை அச்சுறுத்தும்
மண்டையோட்டுக்குள்
மரணத்தின் எதிர்வுகள் எதிரொலிக்கும்

விரல் சூப்பிவாறு
தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால்
"நிலவு என்னைப் பின்தொடர்கிறது"
என்று பிதற்றியவனும் நான்தான்
தொண்டைக் குழியையும் மீறிச் சென்றவிதை
வயிற்றினுள் முளைக்கப் போவதாய்
அலறிய அந்த அவனும் நான்தான்

எனக்கு முன்னால்
இறுக மூடி ஆணியடித்த
சவப்பெட்டிக்குள் இருப்பதுதானென்ன?
முகவரியில்லாத பிணமா...?
குண்டு வெடிப்பில் சிதைந்துபோன
ஐந்தாறு உடல்களின்
உறுப்புகளின் தொகுப்பா...?
இல்லையதில் எதுவுமேயில்லாது
அங்கு வெறுமையுமிருக்கலாம்
நடுங்கும் விரல்களால்
போர்க்கவிதையெழுத முயல்கின்றேன்
பிணங்களாய் வந்து விழுகின்றன ஏட்டில்

சூரியனோ
காற்றில் துடைத்துவிடப்பட்ட
கட்டாந்தரையில் புரளும்
ஒற்றைச் சருகுபோல மேற்கில்

சிறுவளர்ச்சியொன்றின் பின்னர்தான் தெரியவந்தது
நிலவு என்னைப் பின்தொடர்வதில்லையென்றும்
விதையொன்று முளைக்க வளமான மண் தேவையென்றும்

அதுவரையில் எனக்குப் புரியாதிருந்தது
இல்லாதவொன்றை
இருப்பதாய்க் கனவுகாணும்
புனைவுகளில் அடிக்கடி
தொலைந்துபோகும் ஒருவனென்று...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## நாய்கள் புராணம்

கடந்த மாதம் தமிழ்த் தினசரியொன்றில், அண்மையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றைப் போட்டிருந்தார்கள். ஒரு மிருக வைத்தியர் தனது காரில் சென்றுகொண்டிருக்கையில் தெருவின் ஓரத்தில் காயப்பட்ட நிலையில் படுத்துக் கிடந்த நாயொன்றைக் கண்டிருக்கின்றார். தனது காரைப் பின்னுக்குக் கொண்டுவந்து அந்த நாயை ஏற்றிக்கொண்டு தனது வீட்டிற்குக் கொண்டு சென்று மருந்தைக் கட்டி, ஊசி போட்டு வெளியில் விட்டுவிட்டார்.

இரண்டு வாரங்கள் சென்றிருக்கும். வைத்தியரின் வீட்டுக் கதவை யாரோ தட்டியிருக்கின்றார்கள். அவர் கதவைத் திறந்து பார்த்திருக்கின்றார். அவர் மருந்து கட்டிய நாய் நின்றிருந்தது. அதற்குப் பின்னே இன்னுமொரு நாய் நின்றிருந்தது. அதற்கும் உடம்பில் காயம். வைத்தியர் ஆச்சரியத்தில் உறைந்து போனார்.

இதை வாசிக்கும்போது எமக்கும் உள்ளத்தைத் தொடுகின்றதல்லவா...? நாய் உண்மையில் வித்தியாசமான மிருகந்தான். இதனை எழுதும்போது எனது சொந்த அனுபவமொன்று ஞாபகத்திற்கு வருகின்றது.

சுமார் முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவம். எங்கள் வீடு இருந்த இடம் சுமார் ஒன்றரை ஏக்கர் காணி. அடி வளவில் நிறைய தென்னை, பனை மரங்கள், பற்றைகள், கொடிகள் என்று சோலையாகக் காணப்படும். அப்பகுதியில்தான் நாங்கள் பின்னேரத்தில் விளையாடுவோம். எங்களிடம் இரண்டு நாய்கள் இருந்தன. ஒன்று கறுப்பு நிறம் மற்றையது செம்மண் நிறம். அவையும் எங்களுடன் விளையாடும். அங்கிருந்த பெரிய பனைமரமொன்றில் ஆளுயரக் குளவிக்கூடு ஒன்று இருந்துள்ளது. அது எமக்குத் தெரியாது.

ஒரு நாள் எமது கடைசி இரு தம்பிகளும் சிறு பந்தை எறிந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். பந்து போய் குளவிக்கூட்டில் பட குளவிகள் கலைந்து வெகுண்டெழும்பி வந்துள்ளன. இவையெதுவும் தம்பிமாருக்குத் தெரியாது. உடனே இரண்டு நாய்களும் தம்பிமாரை விட்டுக் கலைத்தன. அவர்களும் என்னவென்று புரியாமல் வளர்த்த நாய்கள் எம்மைக் கடிக்க வருகின்றனவே என்று பயந்தவாறு அலறியடித்துக்கொண்டு என்னிடம் ஓடி வந்தார்கள். இதற்கிடையில் அவ்விரண்டும் மீண்டும் பனைமரத்தடிக்குச் சென்றன. அத்தனை குளவிகளும் இரண்டு நாய்களையும் மொய்த்துக்கொண்டன. அவையிரண்டு ஜீவன்களும் "பிறவுண்" நிற வெல்வெற் துணியால் போர்த்தியவை போன்று காணப்பட்டன. நாம் பயத்தால் உறைந்து வீட்டிற்குள் புகுந்துவிட்டோம்.

அடுத்த நாள் காலையில் ஒரு நாய் பற்றைக்குள்ளும் மற்றைய நாய் பாவனைக்கு இன்னும் உட்படுத்தப்படாத புதிய பனைமட்டைக் கோழிக் கூட்டிற்குள்ளும் செத்துக் கிடந்தன. இரண்டு பேரைக் காப்பாற்ற அவையிரண்டும் தம்மைப் பலியாக்கிக்கொண்டன. இதனை என்னவென்று வியாக்கியானப்படுத்துவது? சில மனிதர்களைப் பார்க்கிலும் நாய்கள் உயர் பண்புள்ளவையாகத் தோன்றுகின்றதல்லவா?

என்னுடை நெருங்கிய நண்பரொருவர் தனது அனுபவத்தைச் சொன்னார். அவர் ஒரு நாய் வளர்த்துள்ளார். அது அவரில் மிகவும் பிரியமானது. ஒருநாள் அவர் கதிரையில் இருந்து பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்தார். அப்போது அந்த நாய் வந்து அவரின் கால்களை நக்கிவிட்டு கதிரையைச் சுற்றிவிட்டு இரண்டாம் முறையும் நக்கிவிட்டு திரும்பவும் இருக்கையைச் சுற்றிக்கொண்டு வந்து முகத்தை அவரின் கால்களில் தேய்த்துவிட்டு கிணற்றடிப் பக்கம் சென்று படுத்திருக்கின்றது. மறுநாள் காலையில் பாத்தபோது அது இறந்து கிடந்திருக்கின்றது.

இவ்வாறான அனுபவங்கள் உங்களுக்கும் கிடைத்திருக்கும். அவற்றை மீட்டுப் பாருங்கள்.

ஒருவர் அண்மையில் கூறினார்: "மனிதருக்கு ஆறறிவு, நாய்களுக்கு ஐந்தறிவுதான். ஆனால் இப்போதெல்லாம் அதில் அரைவாசி மனிதருக்குக் குறைந்து, அது நாய்களுக்குக் கூடியுள்ளது போல் தோன்றுகின்றது" இது உங்களின் தீர்ப்பிற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





## சூரிய நமஸ்காரம்



### நிலை - 10

- நிமிர்ந்து வலது கால் பாதத்தை இரண்டு கைகளுக்கும் இடையே கொண்டுவந்து வைக்கவேண்டும்.
- மூன்றாம் நிலையில் செய்வதைப் போல் செய்யவும்.
- இதைச் செய்யும்போது மூச்சுக் காற்றை உள்ளிழுக்க வேண்டும்.



### நிலை - 11

- அடுத்து இடது கால் பாதத்தை இரண்டு கைகளுக்கும் இடையில் வலது பக்கத்திற்குப் பக்கத்தில் வைக்க வேண்டும்.
- கால் முட்டிகளை வளைக்காது சரி செய்துகொள்ள வேண்டும்.
- இரண்டாவது நிலையில் செய்வதைப் போல் நெற்றியை முழங்கால் முட்டியில் தொட முயற்சிக்கவும்.
- இந்நிலையில் மூச்சை வெளிவிட வேண்டும்.
- இது பாதகஸ்தாசன நிலையாகும்.

**மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar (India)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

*ஜூலை மாதத் தொடர்ச்சி....*

**நாணப் பூப்போல**
**நரச்ச கிழவனுக்கு**
**குங்குமப் பூப்போல - இந்தக்**
**குமராகா வாச்சிருக்கு?**

இங்கும் உவமை அழகு மிளிர்கிறது. நாணல் பூவை நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும். அதேவேளை ஏழைக் குமரிகளை பணக்காரக் கிழவர்கள் மணப்பதுண்டு. அதனைக் கேலி செய்தே இப்பாடல் பாடப்பட்டது.

அடுத்து காதற் பட்டை நோக்கினால்

**குஞ்சி முகத்தழகி**
**கூர் விழுந்த மூக்கழகி**
**சாம்பல் குருத்தழகி - இப்ப**
**சாகிரண்டி ஒன்னால**

தலைவிதியை எண்ணி ஏங்கித் தவிக்கும் இளைஞனின் இதய தாபம் இது. மேலும் அவன் தனது உள்ளக் கொதிப்பை அள்ளி வீசுகின்றான்.

**மாடப்புறாவே**
**மாசுபடாச் சித்திரமே**
**கோடைக் கனவினிலே**
**கொதிக்கிறண்டி ஒன்னால**

சொற்சுவை, பொருட்சுவை ததும்ப எதுகை, மோனையுடன் தனது மனக் கிடக்கையை எடுத்து இயம்புகின்றான். அதற்குப் பதிலாக ஏங்கும் இளஞ்சிட்டு பாடுகின்றாள்.

**கடலே இரையாதே**
**காத்தே நீ வீசாதே**
**நிலவே நீ எரியாதே - என்ர**
**நீலவண்டார் வந்து சேருமட்டும்**

என்று தனிமை அவளைத் தத்தெடுத்துத் தாலாட்டுகிறதா? இன்னுமொரு காதற் பாடல் இவ்வாறு அமைகின்றது.

**ஓடையில போறதண்ணி**
**தும்பிவிழும் தூசுவிழும்**
**வீட்டுக்கு வாங்கமச்சான்**
**குளுந்ததண்ணி நான்தாறன்**
**வாவென் றழைப்பேன் மச்சான்**
**வாசலிலே பாய்தருவேன்**
**வாப்பா அறிஞ்சாரெண்டால்**
**வாளெடுத்து வீசிடுவார்**
**மாலை விளக்கெரிய**
**மணவாளன் சோறுதின்னப்**
**பாலன் விளையாட ஒரு**
**பாக்கியந்தா ஆண்டவனே**

இனித் தத்துவப் பாடல்களை நோக்குவோம்

**மண்டையில எழுதி**
**மயித்தால மூடினத**
**ஆரறிவார் இவ்வுலகில் - அந்த**
**ஆதிவல்லோன் தானறிவான்**

விதியின் விளையாட்டை இத்தத்துவப் பாடல் சூட்சுமமாகப் புடமிட்டுக் காட்டுகிறது அல்லவா?

**ஆரும் எழுதினத**
**அழிச் செழுதிப் போட்டிரலாம்**
**அந்த ஆதி எழுதினத - அவன்**
**அழிச் செழுதப் போறதில்ல**

# நாட்டார் பாடல்கள்

- திருமதி. வயலற் சந்திரசேகரம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



"டெங்கு நோயினால் சில நன்மைகளும் ஏற்பட்டுள்ளன"

"எப்படி?"

"வளவு சுத்தமாக்கும் வேலை ஏழைகளுக்குக் கிடைக்கிறதல்லவா"

● மணி

இங்கும் இறைவன் எழுதிய எழுத்தை அவன் அழித்து எழுதமாட்டான் என்பதை ஆணித்தரமாக இப்பாடல் விளக்குகிறது.

இனித் தொழிற் பாடலை நோக்குவோம்.

**கட்டுமரம் ஏறி**
**எட்டுமட்டும் கடலில் வந்து**
**கொட்டும் பனியில் நின்று**
**வாடுகின்றேன் குயிலே**

**குளிர் காத்தடிக்க**
**உடம்பெல்லாம் புல்லரிக்க**
**வெளிறிய ஒன் முகந்தான்**
**வேதனையிற் தோணுதடி**

**மணலாமீனூ மன்னாமீனூ**
**சூடமீனூ சுறாமீனூ**
**ஒட்டிமீனூ ஓராமீனூ**
**பெட்டி நிறையக் கொண்டுவாறேன்**

மலையக நாட்டார் பாடல் ஒன்று இவ்வாறு அமைகிறது.

**எண்ணிக் குழி வெட்டி**
**இடுப்பொடிஞ்சி நிக்கயில**
**வெட்டு வெட்டு என்கிறானே**
**வேலையத்த கங்காணி**

**அட்டைக் கடியும்**
**அரிய வழிநடையும்**
**கட்டை இடறுதலும்**
**காணலாம் கண்டியிலே**

**ஊரான ஊரிழந்தேன்**
**ஒத்தப்பனை தோப்பிழந்தேன்**
**பேரான கண்டியிலே**
**பெத்ததாய நான் மறந்தேன்**

இப்பாடலில் கங்காணிமாரின் கெடுபிடியும் அட்டையின் ஆக்கிரமிப்பும் தெளிவாகிறது.

## காட்சியும் கவிதையும் 08



இந்தப் படத்தைப் பார்க்கும்போது உங்கள் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை இருவரிக் கவிதையாக எழுதி அனுப்புங்கள். தெரிவு செய்யப்படும் கவிதை அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.



கதிர்
மட்டக்களப்பு

## காட்சியும் கவிதையும் 07

### பாராட்டுப் பெறும் கவிதை

தொலைத்தொடர்பு சாதனங்கள் வரவால்

தொலைந்துபோன வாழ்க்கையினி வருமா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
15- 10 - 2009




# விவிலியம் கற்போம் - 80

(எண்ணிக்கை 16:25–50)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மோசே எழுந்து தாத்தானிடமும் அபிராமிடமும் போனார்; இஸ்ரயேல் மூப்பர் அவருக்குப் பின் சென்றனர். அவர் மக்கள் கூட்டமைப்பிடம், “இந்தப் பொல்லாத மனிதரின் பாவங்களோடு சேர்ந்து நீங்கள் அழிக்கப்படாதபடி அவர்கள் ......................................... விட்டு அகன்று போகும்படி உங்களை வேண்டுகிறேன்; அவர்களுக்குரிய எதையும் தொடவேண்டாம்” என்றார். அவ்வாறே கோராகு, தாத்தான், அபிராம் ஆகியோரின் கூடாரத்தை விட்டு அவர்கள் அகன்றனர். தாத்தானும் .................................. வெளியே வந்து தங்கள் மனைவியர், புதல்வர், குழந்தைகளோடு கூடார வாயிலருகில் நின்றனர். மோசே “இப்பணிகளைச் செய்ய ஆண்டவர் என்னை அனுப்பியிருக்கிறார். எல்லா மனிதரும் சாவதுபோல் இவர்களும் செத்தால் அல்லது ......................................... அடைந்தால் ஆண்டவர் என்னை அனுப்பவில்லை என்பது பொருள். ஆனால், நிலம் தன் வாயைத் திறந்து அவர்களையும், அவர்களுக்குரிய அனைத்தையும் விழுங்கிவிட பாதாளத்துள் இறங்கினால், இம்மனிதர் ஆண்டவரை இழிவுபடுத்தி விட்டனர் என அறிவீர்” என்றார். பின் அடியிலிருந்து தரை ....................................... அனைவரையும் விழுங்கியது. அவர்கள் அழிந்தனர். இஸ்ரயேலர் அஞ்சியோடினர். பின்பு ஆண்டவரிடமிருந்து நெருப்பு புறப்பட்டு வந்து தூபங் காட்டிய இருநூற்றைம்பது மனிதரையும் விழுங்கிவிட்டது. பின் ஆண்டவர் மசேயிடம் “............................................... இருந்த தூபக் கலசங்களை எடுத்து நெருப்பை அப்பால் கொட்டிவிடும்படி குருவாகிய ஆரோன் மகன் எலயாசரிடம் சொல். ஏனெனில் அவை புனிதமானவை. பாவஞ் செய்த இம்மனிதர்களின் தூபக் கலசங்கள் அவர்களது உயிர் பறிக்கப்பட்டுவிட்டதால், ................................................... ஆக்கப்பட்டுள்ளன” என்றார். எலயாசர் எரிக்கப்பட்டவர்கள் கொண்டுவந்திருந்த வெண்கலத் தூபக் கலசங்களை எடுத்தார். பீடத்தை மூடுவதற்கு அடிப்பு வேலையாகச் செய்யப்பட்டன. இது ஒரு நினைவுச் சின்னம். இதனால் ............................................... வழித்தோன்றியிராத எவனும் ஆண்டவர் திருமுன் வரத் துணியான்; மோசே மூலம் ஆண்டவர் எலயாசருக்குச் சொன்னதும் அதுவே. மறுநாளில் கூட்டமைப்பு மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முறுமுறுத்தது. மக்கள் அவர்களுக்கு எதிராகக் கூடிவந்தபோது அவர்கள் .................................... கூடாரத்தை நோக்கித் திரும்பினர். உடனே மேகம் அதை மூடியது. ஆண்டவர் “நான் இந்த மக்களை எரிக்கும்படி நீங்கள் விலகிக்கொள்ளுங்கள்” என்றார். அவர்கள் குப்புற விழுந்தார்கள். மோசே ஆரோனிடம் “தூபக் கலசத்தைக் கொண்டுபோய்க் கறை நீக்கம் செய். ............................................ தொடங்கிவிட்டது” என்றார். ஆரோன் தூபக் கலசத்துடன் சபை நடுவே ஓடினார். மக்களைக் கறைநீக்கம் செய்தார். இறந்தோர்க்கும் வாழ்ந்தோர்க்கும் இடையே நின்றார்; கொள்ளை நோய் நின்றது. ........................................ செயலை முன்னிட்டு இறந்தோர் தவிர கொள்ளை நோயால் இறந்தோர் பதினாலாயிரத்து எழுநூறு பேர். கொள்ளை நோய் நின்றதும் ஆரோன் மோசேயிடம் திரும்பினார்.

**விடைகள் : எரிநெருப்பில், சந்திப்பு, தூய்மை, ஆரோன், கோராகின், பிளந்தது, கொள்ளைநோய், கூடாரங்களை, தண்டனையை, அபிராமும்**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் – 80

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. புனித பூமி என அழைக்கப்படும் நாடு
(இந்தியா, சவூதி அரேபியா, பலஸ்தீனம்)

2. 30வது உலக ஒலிம்பிக் போட்டி நடைபெறவிருக்கும் நாடு
(பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா)

3. சூரிய மண்டலத்தில் இரண்டாவது மிகப்பெரிய கிரகம்
(வியாழன், பூமி, சனி)

4. "வந்தாய்" என்பது
(தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று)

5. 'சிலப்பதிகாரம்' பாடிய தமிழ்ப் புலவர்
(சீத்தலைச் சாத்தனார், காளமேகம், இளங்கோ அடிகள்)

6. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி ........................................
(குயிலாகுமா, மயிலாகுமா, பருந்தாகுமா)

பெயர் : ..........................................................................

முகவரி : ..........................................................................

..........................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 80
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media








## விவிலியம் கற்போம் - 78 விடைகள்

நறுமணத்தை, மரக்கால், வெள்ளாட்டு, அயல்நாட்டவருக்கு, அடைய, மக்கள் கூட்டமைப்பு, அறியாப்பிழை, பாலை நிலத்தில், இஸ்ரயேல், இக்குஞ்சம்

## அறிவை வளர்ப்போம் - 78 விடைகள்

1) மெகல்லன் 2) ருவாண்டா 3) குமார் சங்கக்கார 4)கிட்டப்பார்வைக் குறைபாடு 5) தூர விலகு 6) தொகுத்தல் விகாரம்

## *பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS*

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதியவர்கள் எவருமில்லை**

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி**
**ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- உ.போல் கஜன்
  கடற்கரை வீதி
  தேற்றாத்தீவு - 08
- டிலான் டிலாந்தி
  மாதா கோயில் வீதி
  பெரிய கல்லாறு - 01

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 30 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  லெ.அன்பெல் டீ சௌசா
  508, அம்பாள் வீதி
  அன்புவழிபுரம்
  திருகோணமலை
- **இரண்டாம் பரிசு** - 200/=
  சி.நிலுக்சிக்கா
  மரப்பாலம்
  கரடியனாறு
- 3ம் **பரிசு** - 100/=
  T.வினுஜன்
  03,K.P புதிய நகரம்
  செங்கலடி
  மட்டக்களப்பு

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ – ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media